NOT FOR COMMERCIAL PURPOSE

بسم الله الرحمن الرحيم

# المنهيات

# தடுக்கப்பட்டவை

&

## நூறு பெரும் பாவங்கள், திருமணங்களில் நடக்கும் தவறுகள், அனாசாரங்கள்.

ஆசிரியர்:

அஷ்ஷைக் முஹம்மது ஸாலிஹ் அல் முனஜ்ஜிது

தமிழில்:

உமர் ஷரீஃப் இப்னு அப்துஸ்ஸலாம்

# பொருளடக்கம்

பதிப்புரை........................................................ 5

முன்னுரை ........................................................ 7

கொள்கையில் ........................................................ 9

சுத்தத்தில் ........................................................ 15

தொழுகையில் ........................................................ 17

மஸ்ஜிதில் ........................................................ 24

ஜனாஸாவில் ........................................................ 26

நோன்பில் ........................................................ 29

ஹஜ் மற்றும் குர்பானியில் ........................... 32

தொழில் மற்றும் வியாபாரத்தில் ............... 35

திருமணத்தில் ........................................................ 41

பெண்களுக்கு ........................................................ 48

உணவில் ........................................................ 50

ஆடை அலங்காரத்தில் .................................. 53

பேசுவதில் ......................................................... 56

உண்பது, குடிப்பதில் ...................................... 61

தூக்கத்தில் ........................................................ 63

பொதுவாகத் தடுக்கப்பட்டவை ............... 65

நூறு பெரும் பாவங்கள் ................................ 82

திருமணம் மற்றும் இதர நிகழ்ச்சிகளில்...... 112

பாவமன்னிப்புக் கோருதல் ....................... 121

# பதிப்புரை

தாங்கள் படிக்கும் இந்நூல் மிக சிறியதாக இருப்பினும் இதன் பயனோ மிகப் பெரியது.

ஏனெனில், மார்க்கத்தில் தடை செய்யப்பட்ட வற்றைத் தெரிந்து, அவற்றைவிட்டு, தன்னை முற்றிலும் தவிர்த்துக் கொள்வது மிக அவசியமாகும்.

நன்மைகளை செய்வது (ஈமானை) இறை நம்பிக்கையை உறுதிப்படுத்துகிறது; அதை அதிகப்படுத்துகிறது. அவ்வாறே, பாவங்களில் ஈடுபடுவதும் தடுக்கப்பட்டவற்றை செய்வதும் இறை நம்பிக்கையை பலவீனப்படுத்தி, ஈமானை குறைத்துவிடுகிறது.

இந்நூலின் ஆசிரியர் ஒரு மார்க்க மேதை ஆவார். முற்றிலும் ஆதாரப்பூர்வமான விஷயங்களையே இங்கு குறிப்பிட்டுள்ளார்கள்.

இத்துடன் மற்ற மார்க்க அறிஞர்களின் சில சிறு குறிப்பேடுகளையும் மொழிபெயர்த்து இணைத்து வெளியிட்டுள்ளோம்.

இந்நூலை படிக்கும் நண்பர்கள் இதில் தவறுகள் இருப்பின் எங்களுக்கு தெரியப்படுத்தவும். இன்ஷா அல்லாஹ் மறுபதிப்பில் திருத்திக் கொள்கிறோம்.

அல்லாஹ் நம் அனைவருக்கும் இதன் மூலம் நற்பலன் தருவானாக! ஆமீன்.

உமர் ஷரீஃப் இப்னு அப்துஸ் ஸலாம்

அல்குர்ஆன் மற்றும் நபிமொழி பணியாளன்

ஸஃபர் 8 ஹிஜ்ரி 1425

# முன்னுரை

அகிலத்தாரின் இறைவனான அல்லாஹ்விற்கே எல்லாப் புகழும்! இறையருளும் ஈடேற்றமும் நமது தூதர் முஹம்மது (ஸல்) அவர்களுக்கும் அவர்களது குடும்பத்தார்களுக்கும் தோழர்க ளுக்கும் உண்டாகட்டுமாக!

இதற்கு முன் ‘அலட்சியமாக கருதப்படும் ஆபத்தான குற்றங்கள்’ என்ற நூலில் ஆதாரங் களுடனும் சற்று விளக்கங்களுடனும் இணை வைத்தல் மற்றும் சில பெரும் பாவங்கள் பற்றி குறிப்பிட்டிருந்தோம். மக்கள் பாவத்தில் விழ நேரிடும் சில நிலைமைகளைப் பற்றியும் அதில் விவரித்திருந்தோம்.

குர்ஆனும் சுன்னாவும் நம்மீது தடுக்கப்பட்ட பாவங்களையும் செயல்களையும் விவரித்துக் கூறுகின்றன.

அல்லாஹ்வின் கோபத்திலிருந்தும் அவனது தண்டனையிலிருந்தும் தப்பித்துக் கொள்வதற்காக

அவற்றைத் தெரிந்து, அவற்றிலிருந்து விலகிக் கொள்வது அவசியமாகும்.

ஆகவே, மார்க்கம் என்பது பிறருக்கு நன்மையை நாடுவது என்ற நபிமொழிக் கிணங்க மார்க்கத்தில் விலக்கப்பட்டுள்ள காரியங்களை ஒருங்கிணைத்து இந்நூலில் நான் தொகுத்துள்ளேன். நானும் எனது முஸ்லிமான சகோதரர்களும் இதை அறிந்து பயன்பெற வேண்டும் என்பதே இதன் நோக்கமாகும்.

இங்கு கொடுக்கப்பட்டுள்ள அனைத்தும் திரு குர்ஆன் மற்றும் ஆதாரப்பூர்வமான நபிமொழி களிலிருந்து எடுக்கப்பட்டவையாகும். திருக்குர் ஆன் வசனங்களையோ அல்லது ஹதீஸ்க ளையோ கூறாமல் அதில் கூறப்பட்டுள்ள விஷயங் களை மட்டுமே இங்கு குறிப்பிட்டுள்ளேன்.

அல்லாஹ் நம் அனைவரையும் மானக்கேடான செயல்களிலிருந்து விலக்கி வைப்பானாக! நம்மை மன்னித்து அருள்வானாக!

***முஹம்மது ஸாலிஹ் அல் முனஜ்ஜிது***

# கொள்கையில் தடுக்கப்பட்டவை

- தாயத்துகள் அணிவது, கண் திருஷ்டிகளை தடுக்க வேண்டுமென்பதற்காக கயிறுகள் அணிவது.
- சூனியத்தின் அனைத்து வகைகளும்.
- நட்சத்திரங்களையோ அல்லது மற்ற கோள்களையோ கொண்டு நன்மை அல்லது தீமை நடக்கும் என்று கூறுவது மற்றும் நம்புவது.
- அல்லாஹ்வுடைய (தாத்) உள்ளமையைப் பற்றி சிந்திப்பது. (அவனுடைய படைப்புகளைப் பற்றிதான் சிந்திக்க வேண்டும்.)
- அல்லாஹ்வின் மீது நல்லெண்ணம் கொள்ளாமல் மரணிப்பது.
- இஸ்லாமிய மார்க்கத்தைப் பின்பற்றுபவரை நரகவாசி என்று கூறுவது.

- மார்க்க ஆதாரமில்லாமல் ஒருவரை காஃபிர் என்று கூறுவது.
- உலக காரியங்களில் ஒன்றை பிறரிடத்தில் கேட்கும்போது அல்லாஹ்வின் திருமுகத்திற் காக கொடுங்கள் என்று கேட்பது.
- அல்லாஹ்வுக்காக கொடுங்கள் என்று கேட்ப வருக்கு கொடுக்காமலிருப்பது.(ஆனால்அவர் கேட்கும் விஷயம் பாவமான காரியமாக இருக்கக்கூடாது)
- காலத்தை ஏசுவது.
- சகுனம் பார்ப்பது.
- இணைவைப்பவர்கள், காஃபிர்களுடன் சேர்ந்து தங்குவது.
- அல்லாஹ்வுடைய எதிரிகளாகிய யூதர்கள், கிருஸ்தவர்கள், இணைவைப்பவர்கள், காஃபிர்கள் ஆகியவர்களுடன் ஆழமான நட்புக் கொள்வது.
- அமல்களை வீணாக்குவது. உதாரணமாக பிறர் பார்க்க வேண்டுமென்பதற்காகவோ, பிறர்

புகழ வேண்டுமென்பதற்காகவோ ஒரு அமலை செய்வது அல்லது தனது அமல்களை சொல்லிக் காட்டுவது.

- கஅபத்துல்லாஹ், மஸ்ஜிதுன் நபவி, மஸ்ஜித் அக்ஸா ஆகிய மூன்று இடங்களைத் தவிர மற்ற இடங்களை புனிதமாகக் கருதி அவற்றை தரிசிக்கச் செல்வது.
- கப்ருகளுக்கு மேல் அல்லது அவற்றை சுற்றி கட்டிடம் அமைப்பது.
- கப்ருகளில் விளக்கெரிப்பது.
- நபித்தோழர்களை ஏசுவது, அவர்களுக்கு மத்தியில் நடந்த பிரச்சனைகளைப் பற்றி
- தவறான கண்ணோட்டத்தில் ஆராய்வது.
- 'தக்தீர்' எனும் விதியைப் பற்றி ஆழ்ந்து சிந்திப்பது.
- மார்க்க ஞானமின்றி திருகுர்ஆனில் தர்க்கம் செய்வது, விவாதம் செய்வது.

- திருகுர்ஆன் விஷயத்தில் சர்ச்சை செய்பவர் களுடனோ அல்லது அதை பரிகாசம் செய்பவர்களுடனோ அமர்வது.

- 'தக்தீர்' எனும் விதியை மறுப்பவர்கள், இன்னும் இதுபோன்று கொள்கை ரீதியான பித்அத்கள் (அனாச்சாரங்கள்) செய்பவர்களை நோய் விசாரிக்கச் செல்வது அல்லது அவர்களது ஜனாஸாவில் கலந்து கொள்வது அல்லது அவர்களுக்காகக் கவலைப்படுவது.

- காஃபிர்களோ அல்லது பித்அத்தை சார்ந்தவர் களோ எழுதிய மதரீதியான புத்தகங்களைப் படிப்பது.

- காஃபிர்கள் வணங்கும் பொய்யான கடவுள் களை திட்டுவது. (அதாவது, அதனால் அவர்கள் அல்லாஹ்வை திட்டுவார்கள் என்று இருந்தால்).

- அல்லாஹ்வுடைய அத்தாட்சிகளை, வசனங் களை பரிகாசம் செய்வது.

- அல்லாஹ் தடுத்தவற்றை ஆகுமாக்கிக் கொள்வது அல்லது அனுமதித்தவற்றைத் தடை செய்து கொள்வது.
- அல்லாஹ்வை தவிர பிறருக்கு சிரம் பணிவது அல்லது குனிவது.
- நிஃபாக் எனும் நயவஞ்சகத்தன்மை உள்ளவர் களுடனும், பெரும் பாவங்களை வெளிப் படையாக செய்பவர்களுடனும் கூடி உட்கார்ந்து பேசி மகிழ்வது.
- மார்க்கத்தில் பிரிவினை உண்டு பண்ணுவது, சத்தியத்தில் உள்ள ஜமாஅத்தை விட்டுப் பிரிவது.
- யூதர்கள், கிருஸ்தவர்கள், முஷ்ரிக்குகள், மஜூஸிகள் (நெருப்பை வணங்குபவர்கள்) காஃபிர்கள் ஆகியோர்களின் மதச் சடங்குகள் மற்றும் அவர்களின் கலாச்சாரத்தை பின்பற்றுவது.
- காஃபிர்களுக்கு நாம் முதலில் ஸலாம் சொல்வது.

- வேதம் கொடுக்கப்பட்டவர்கள் தங்களின் நூல்களிலிருந்து சொல்லும் விஷயங்களை உண்மை அல்லது பொய் என்று சொல்வது. (ஆனால் அதற்கு உண்மை அல்லது பொய் என்பதற்கு நமது ஷரீயத்தில் ஆதாரம் இருந்தாலே தவிர).

- பெற்றோர், பிள்ளைகள், சிலைகள், மீது சத்தியம் செய்வது.

- அல்லாஹ்வும் நீங்களும் நாடினால் என்று சொல்வது.

- அல்லாஹ்வைத் தவிர மற்றவரை இறைவன், கடவுள், ஆண்டவர் என்று சொல்வது.

- நேரம் சரியில்லை என்று சொல்வது.

- உன்மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாகட்டும்! அல்லாஹ்வின் கோபம் உண்டாகட்டும்! நீ நரகவாதி! என ஒருவருக்கொருவர் சபித்துக் கொள்வது.

# சுத்தத்தில் தடுக்கப்பட்டவை

- தேங்கி நிற்கும் தண்ணீரில் சிறுநீர் கழிப்பது மற்றும் தெருக்களிலோ அல்லது தெருக்களின் ஓரங்களிலோ மலம், ஜலம் கழிப்பது.
- மக்கள் பயன்படுத்தும் நிழலிலும், குடிநீருக்கு பயன்படுத்தும் குளங்களுக்கு அருகிலும் மலம், ஜலம் கழிப்பது.
- மலம், ஜலம் கழிக்கும்போது கிப்லாவை முன்னோக்கி அமர்வது அல்லது கிப்லாவை பின்னோக்கி அமர்வது. (சில அறிஞர்கள் கட்டிடங்களுக்குள் இருந்தால் குற்றமில்லை என்கின்றனர்.)
- வலது கையைக் கொண்டு மர்மஸ்தானத்தை சுத்தம் செய்வது அல்லது வலது கையால் (மர்மஸ்தானத்தை) துடைப்பது.

- தூங்கி எழுந்தவுடன் கைகளைக் கழுவாமல் தண்ணீர் உள்ள பாத்திரங்களில் கைகளை நுழைப்பது.
- மலம், ஜலம் கழிப்பவருக்கு ஸலாம் சொல்வது.
- உறுப்பை வலது கையால் பிடித்துக் கொண்டு சிறுநீர் கழிப்பது.

# தொழுகையில் தடுக்கப்பட்டவை

- சூரியன் உதிக்கும் நேரத்திலோ அல்லது மறையும் நேரத்திலோ அல்லது நடு உச்சி நேரத்திலோ (நஃபில்) தொழுவது.

- (சுபுஹு) தொழுகைக்குப் பின் சூரியன் உதயமாகும் வரையிலும் அஸர் தொழுகைக்குப் பின் அது மறையும் வரையிலும் (நஃபில்) தொழுவது. (ஆனால் பள்ளியின் காணிக்கைத் தொழுகை, இன்னும் இது போன்ற காரணங்களுடன் நிறைவேற்றப்படும் தொழுகைகளைத் தொழலாம்.)

- வீடுகளில் நஃபில் தொழுகைகளை தொழாமல் அடக்கஸ்தலங்களைப் போன்று அவற்றை ஆக்குவது.

- ஃபர்ளு தொழுகையை தொழுத பின்பு இடை வெளி இல்லாமல் நஃபிலான தொழுகையை

சேர்த்துத் தொழுவது. (ஃபர்ளு தொழுகைக் குப் பின்பு சிறிது நேரம் திக்ரு செய்வது அல்லது துஆ செய்வது அல்லது இடம் மாறி தொழுதுகொள்ள வேண்டும்.)

- ஃபஜ்ருடைய நேரம் ஆரம்பித்தபின் அதனுடைய சுன்னத்தான தொழுகையைத் தவிர மற்ற நஃபிலான தொழுகையில் ஈடுபடுவது.
- தொழுகையில் இமாமுக்கு முந்தி செயல் களைச் செய்வது.
- ஜமாஅத் தொழுகையில் வரிசையை விட்டு தனியாக நின்று தொழுவது.
- தொழுகையில் முகத்தை அங்கும் இங்கும் திருப்புவது அல்லது வானத்தின் பக்கம் உயர்த்திப் பார்ப்பது.
- ருகூஃ, சுஜூதுகளில் குர்ஆன் ஓதுவது. (சுஜூதுகளில் குர்ஆனில் உள்ள துஆ உடைய ஆயத்துகளை துஆவிற்காக ஓதலாம்.)

- உணவு தயாராகி, மனம் உணவில் நாட்டம் கொண்ட பின்பு தொழுகையை ஆரம்பிப்பது.
- சிறுநீரையோ, மலத்தையோ, காற்றையோ அடக்கிக் கொண்டு தொழுவது.
- அடக்கஸ்தலங்களிலும், குளியல் அறைகளிலும் தொழுவது.
- காக்கை கொத்துவது போன்று அவசர அவசரமாகத் தொழுவது.
- நரி பார்ப்பது போன்று தொழுகையில் அங்குமிங்கும் பார்ப்பது.
- மிருகங்கள் முன்னங்கால்களை நீட்டிக் கொண்டு உட்காருவது போன்று தொழுகையில் உட்காருவது.
- முன்னங்கால்களை தரையில் ஊன்றிக் கொண்டு நாய் உட்காருவது போன்று தொழுகையில் இரு கைகளையும் தரையில் ஊன்றி உட்காருவது.
- ஒட்டகங்களைப் போன்று தனக்கென்று

பள்ளியில் ஓர் இடத்தை குறிப்பாக்கிக் கொள்வது.

- தொழுகையில் பூமியை துடைப்பது. (தேவை ஏற்பட்டால் கஜூதுடைய இடத்தில் கல் போன்றதை அகற்ற ஒரே ஒரு முறை மட்டும் அனுமதி உண்டு.)

- துணி போன்றவற்றால் வாயை மறைப்பது.

- அருகில் தொழுபவர்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் தொழுகையில் சப்தமிட்டு ஓதுவது.

- தூக்கம் மிகைக்கும் போது இரவு வணக்கங் களைத் தொடர்வது. (தூக்கம் மிகைத்தால் சிறிது நேரம் தூங்கி ஓய்வெடுத்த பின்புதான் வணக்கத்தில் ஈடுபட வேண்டும்.)

- மார்க்கத்தில் குறிப்பிட்ட இரவுகளைத் தவிர ஏனைய இரவுகளில் முழு இரவு விழித்திருந்து வணங்குவது. (குறிப்பாக, தொடர்ந்து இவ்வாறு செய்வது அறவே கூடாது.)

- தொழுகையில் கொட்டாவி விடுவது, ஊதுவது.
- வரிசையில் அமர்ந்திருக்கும் மக்களின் பிடரிகளை தாண்டிச் செல்வது.
- தொழுகையில் ஆடையை இறுக்கிக் கொண்டு தொழுவது.
- சரியாக தொழுத தொழுகையை திரும்ப மீண்டும் தொழுவது.
- தொழும்போது காற்று பிரிந்துவிட்டது என்று உறுதியில்லாமல், சந்தேகத்தினால் மட்டும் தொழுகையை விட்டு வெளியேறுவது.
- ஜுமுஆ குத்பாவின்போது பேசுவது. விளையாடுவது.
- ஜுமுஆ குத்பாவின்போது இரு கால் களையும் உயர்த்தி, தொடையை வயிற்றுடன் சேர்த்து கால்களைத் துணியைக் கொண்டோ, கையைக் கொண்டோ கட்டி உட்காரும்போது தூக்கம் வந்துவிடும் அல்லது அவ்ரத்

(மறைக்க வேண்டிய பகுதி) வெளிப்பட்டு விடும் அல்லது காற்று வெளியேறிவிடும் என்று இருப்பின் அப்படி உட்காருவது.

- இகாமத் சொல்லப்பட்டபின் ஜமாஅத் தொழுகையில் சேராமல் வேறு தொழுகையில் ஈடுபடுவது.
- தேவையில்லாமல் இமாம் உயர்ந்த இடத்தில் நின்று தொழவைப்பது.
- தொழுபவருக்கு முன் குறுக்கே செல்வது.
- தொழுபவர் தனக்குமுன் வைக்கப்பட்ட சுத்ராவிற்கு (-தடுப்புக்கு) இடையில் யாரும் செல்லும்போது அவரை தடுக்காமல் விடுவது.
- தொழுபவர் தனது காலணியை வலப்பக்கம் வைப்பது; அதுபோன்று இடப் பக்கம் யாரும் தொழுவார்கள் என்று இருப்பின் இடப்பக்கம் வைப்பது. (இடப்பக்கம் யாரும் இருந்தால் தனது இரு கால்களுக்கிடையில் வைத்துக் கொள்ள வேண்டும்.)

- இஷா தொழுகைக்கு முன் தூங்குவது. (அதாவது, மஃரிப் தொழுதபின் தூங்கினால் இஷாவின் நேரம் முடியும் வரை தூக்கத்திலேயே இருந்துவிடுவோம் என்று அஞ்சினால் இஷா தொழுகாமல் தூங்கக் கூடாது.)

- மார்க்க விஷயங்களை அல்லது தவிர்க்க முடியாத முக்கியமான விஷயங்களைத் தவிர மற்றவற்றை இஷா தொழுத பின் பேசுவது, அவற்றில் ஈடுபடுவது.

- வீட்டில் உள்ளவர்கள் தன்னை முற்படுத்தாமல் இருக்க அவர்களுக்கு இமாமத் செய்ய தானாக ஒருவர் முந்துவது.

- மார்க்க காரணத்தை முன்னிட்டு மக்கள் தன்னை வெறுக்கும்போது அவர்களுக்கு இமாமத் செய்ய முந்துவது.

# மஸ்ஜிதில்
## தடுக்கப்பட்டவை

- ⏩ மஸ்ஜிதுகளில் வியாபாரம் செய்வது, காணாமல் போன பொருளை தேடுவது.
- ⏩ மஸ்ஜிதுகளை நடைபாதைகளாக பயன் படுத்துவது.
- ⏩ குற்றத்திற்குரிய தண்டனைகளை பள்ளிக்குள் நிறைவேற்றுவது.
- ⏩ மஸ்ஜிதில் அதான் சொன்ன பின்பு அவசியமின்றி தொழுகாமல் வெளியேறுவது.
- ⏩ மஸ்ஜிதில் நுழைந்தபின் நேரமிருப்பின் இரண்டு ரகஅத் தொழாமல் உட்காருவது.
- ⏩ தொழுகைக்கு செல்லும்போது அவசர அவசரமாக ஓடுவது.
- ⏩ மஸ்ஜிதில் அவசியமின்றி இரு தூண்களுக்கு மத்தியில் வரிசைகளை அமைப்பது.
- ⏩ பூண்டு, வெங்காயம் போன்ற அருவருப்பான

வாடை உள்ளவற்றை (பச்சையாக) சாப்பிட்ட பின் மஸ்ஜிதுக்குள் நுழைவது.

- பிற முஸ்லிம்களுக்கு இடையூறு தருபவற்றை எடுத்துக் கொண்டு மஸ்ஜிதுக்குள் நடப்பது.
- ஷரீஅத்தின் வரம்புகளுக்கு உட்பட்டு பெண்கள் மஸ்ஜிதுக்குச் செல்வதை தடுப்பது.
- பெண்கள் மஸ்ஜிதுக்குச் செல்லும்போது வாசனை பொருள்களைப் பயன்படுத்துவது.
- மஸ்ஜிதில் இஃதிகாஃப் இருக்கும் நாள்களில் மனைவியுடன் கூடுவது.
- மஸ்ஜிதுகளை போட்டிக்காகவும், பெருமைக் காகவும் கட்டுவது.
- சிகப்பு நிறத்தைக் கொண்டோ அல்லது மஞ்சள் நிறத்தை கொண்டோ மஸ்ஜிதுகளை அலங்கரிப்பது.
- தொழுபவரின் சிந்தனையை திருப்பும் அளவுக்கு மஸ்ஜிதுகளில் அலங்கார வேலைப்பாடுகள் செய்வது.

# ஜனாஸாவில் தடுக்கப்பட்டவை

- கப்ருகளை கற்களைக் கொண்டு கட்டுவது.
- அதைச் சுற்றிலும் மதில் கட்டுவது அல்லது மற்ற கப்ருகளைவிட உயர்த்துவது.
- கப்ருகளின் மேல் உட்காருவது.
- செருப்புகளை அணிந்து கப்ருகளுக்கு மத்தியில் நடப்பது.
- கப்ருகளில் அடக்கம் செய்யப்பட்டவரின் பெயரை எழுதுவது.
- கப்ருகளைத் தோண்டுவது.
- கப்ருகளை பள்ளிவாயிலாக மாற்றுவது.
- ஜனாஸா தொழுகையைத் தவிர மற்ற தொழுகைகளை கப்ருகளுக்கு அருகில் தொழுதல்.

- இறந்தவருக்காக மூன்று நாள்களுக்கு அதிகமாக துக்கம் கடைப்பிடிப்பது. (ஆனால் கணவன் இறந்துவிட்டால் பெண் நான்கு மாதம் பத்து நாட்கள் துக்கம் கடைபிடிக்க வேண்டும்.)
- கணவன் இறந்துவிட்ட பெண் (இத்தா காலம் வரை) நறுமணம், சுர்மா, மருதாணி, நகைகள், அலங்காரமான ஆடைகளைப் பயன் படுத்துவது.
- ஒப்பாரி வைப்பது.
- ஒப்பாரி வைக்கத் தூண்டுவது.
- அதற்காக இறந்தவர் வீட்டில் ஒன்று கூடுவது.
- ஒப்பாரி வைக்கும் பெண்ணை கூலிக்கு அமர்த்துவது.
- கன்னத்தில் அறைந்து கொள்வது.
- தலைமுடியை அவிழ்த்துக் கொள்வது, விரித்துப் போட்டுக் கொள்வது.

- காஃபிர்கள் முறையில் இறப்பு செய்தி அறிவிப்பது. (உதாரணமாக: துண்டு பிரசுரங்கள், சுவரொட்டிகள், ஊரெங்கும் ஒலிபெருக்கிகள் மூலமாக அறிவிப்பது. அவ்வாறின்றி, பொதுவாக அறிவிப்பு செய்வது கூடும்.)

- இரங்கல் கூட்டங்கள் நடத்துவது.

# நோன்பில் தடுக்கப்பட்டவை

- நோன்புப் பெருநாள் அன்று நோன்பு நோற்பது.
- ஹஜ்ஜுப் பெருநாள் அன்று நோன்பு நோற்பது.
- ஹஜ்ஜுப் பெருநாளை தொடர்ந்துள்ள மூன்று நாள்களில் நோன்பு நோற்பது.
- ‘யவ்முஷ் ஷக்’ என்ற ஷவ்வாலின் 29 பிறையை அடுத்து உள்ள சந்தேகத்திற்குரிய நாளில் நோன்பு நோற்பது.
- வெள்ளிக் கிழமை மட்டும் அல்லது சனிக்கிழமை மட்டும் நோன்பு நோற்பது.

- வாழ்க்கை முழுவதும் நோன்பு நோற்பது.
- ரமழான் பிறைக்கு முன்புள்ள இரண்டு அல்லது ஒரு நாள் நோன்பு நோற்பது.
- ஷஅபான் மாதத்தின் பிந்திய 15 நாள்களில் நோன்பு வைப்பது. (ஆனால் வழக்கமாக பிடிக்கும் நோன்பாக இருப்பின் குற்றமில்லை.)
- இஃப்தார் இன்றி (முதல் நோன்பை திறக்காமல்) இரண்டாவது நோன்பு நோற்பது.
- ஹஜ்ஜில் உள்ளவர் அரஃபா தினத்தன்று நோன்பு நோற்பது கூடாது. ஆனால் குர்பானி கொடுக்க முடியாதவர் நோற்கலாம்.
- நோன்பில் வாய் கொப்பளிக்கும்போதும் மூக்கை சுத்தம் செய்யும்போதும் அதிகமாக நீரை உள்ளே இழுத்து செய்வது.
- கணவன் இருக்கும்போது அவன் அனுமதியின்றி மனைவி நஃபில் நோன்பு வைப்பது.

- ஸஹர் நேரத்தில் ஏதும் சாப்பிடாமல் நோன்பு நோற்பது.
- நோன்பாளி, தன் மனைவியிடம் இச்சையான வார்த்தைகளைப் பேசுவது.
- நோன்பாளி பிறரிடம் சண்டை, சச்சரவு செய்வது.
- நோன்பு வைத்துக் கொண்டு பொய் பேசுவது.
- போர்க்காலத்தில் நோன்பு நோற்பது.

# ஹஜ் மற்றும் குர்பானியில் தடுக்கப்பட்டவை

- ஹஜ் கடமையான பின்பு தக்க காரணமின்றி அதைப் பிற்படுத்துவது.
- ஹஜ்ஜில் இச்சையான வார்த்தைகளை, தீய வார்த்தைகளைப் பேசுவது. தர்க்கம் செய்வது.
- இஹ்ராம் அணிந்தவர் சட்டை, தலைப்பாகை, சர்வால் (கால்சட்டை) இதுபோன்ற தைக்கப் பட்ட ஆடைகளை அணிவது.
- இஹ்ராம் அணிந்த பெண் முகத்திரை மற்றும் கையுறை அணிவது.
- இஹ்ராம் அணிந்தவர் புனித மக்கா

நகரத்திலுள்ள மரம், செடி, கொடிகளை வெட்டுவது, ஒடிப்பது, பிடுங்குவது.

- ஹரம் ஷரீஃபில் ஆயுதங்கள் எடுத்துச் செல்வது. அங்கு வேட்டையாடுவது. அங்குள்ள வேட்டை பிராணிகளை விரட்டுவது.
- ஹரமில் கீழே கிடக்கும் பொருள்களை (அறிவிப்புச் செய்து ஒப்படைப்பவரைத் தவிர மற்றவர்) எடுப்பது.
- இஹ்ராம் அணிந்த நிலையில் மரணித்தவரை கஃபனிடும்போடுது அவருக்கு நறுமணம் பூசுவது, அவர் தலையை மறைப்பது.
- ஹஜ் செய்த பின்பு விடைபெறும் தவாஃப் (தவாஃபுல் விதா) செய்யாமல் திரும்புவது. (ஆனால், மாதவிடாய், பிரசவ காலம் உள்ள பெண்களுக்கு அனுமதி உண்டு.)
- பெருநாள் தொழுகையை தொழுவதற்கு முன்பு குர்பானியை அறுப்பது.

- குறையுள்ள பிராணியை குர்பானி கொடுப்பது.
- குர்பானி பிராணியின் இறைச்சி அல்லது அதன் உறுப்பில் ஏதாவதொன்றை, உரித்து சுத்தம் செய்தவருக்கு கூலியாக கொடுப்பது
- குர்பானி கொடுப்பவர் துல்ஹஜ் பிறை பிறந்தபின் முடிவெட்டுவது, நகம் வெட்டுவது. (குர்பானி கொடுத்தபின் இவற்றைச் செய்து கொள்ளலாம்).

# தொழில் மற்றும் வியாபாரத்தில் தடுக்கப்பட்டவை

- வட்டி வாங்குவது.
- ஏமாற்றுவது, மோசடி செய்வது.
- இறைச்சிக்குப் பகரமாக ஆட்டை விற்பனை செய்வது.
- (நதி, ஓடைகளில் வரும்) அதிகப்படியான தண்ணீரை விற்பது.
- நாய், பூனை, இரத்தம், மது, பன்றி, சிலைகள், ஆண் மிருகத்தின் இந்திரியம் இவற்றை விற்பது வாங்குவது.
- நாயை விற்று அதன் கிரயத்தை சாப்பிடுவது.
- அல்லாஹ் ஹராமாக்கிய பொருள்களை விற்பது, வாங்குவது.

- வாங்கும் எண்ணமின்றி பொருள்களின் விலையை உயர்த்துவது.
- வியாபாரப் பொருள்களின் குறைகளை மறைப்பது.
- வியாபாரப் பொருளின் குறைகளை மறைத்து விற்பது.
- ஜுமுஆ நாளன்று (இரண்டாவது) அதானிற்குப் பின் வியாபாரம் செய்வது.
- தனக்கு சொந்தமில்லாததை விற்பது
- வாங்கிய பொருள் கைக்கு வருவதற்கு முன் விற்பனை செய்வது.
- தங்கத்தைதங்கத்திற்குப்பகரமாக,வெள்ளியை வெள்ளிக்குப் பகரமாக விற்கும் போது ஏற்றத் தாழ்வுடன் விற்பது. (ஆனால் ஒன்றுக்கொன்று சமமாகவும், ரொக்கமாகவும் இருந்தால் விற்பது கூடும்).
- ஒருவர் ஒரு பொருளை ஒருவரிடம்

விற்பனை செய்து கொண்டிருக்கும்போது மற்றவர் குறிக்கிட்டு அவரிடம் தம் பொருளை விற்பது.

- ஒருவர் ஒரு பொருள் வாங்கிக் கொண்டிருக்கும் போது மற்றவர் குறிக்கிட்டு அதை வாங்குவது.
- பழங்களை அது பூவாக இருக்கும் போதும், பறிப்பதற்கு முன்னரும் விற்பனை செய்வது.
- குறையுள்ள பொருளின் குறையை மறைத்து விற்பது.
- நிறுப்பதில், அளப்பதில் குறை செய்வது.
- வியாபாரப் பொருள்களை பதுக்குவது.
- வியாபாரிகள் ஊருக்குள் வருவதற்கு முன் ஊருக்கு வெளியில் சென்று வியாபாரம் பேசுவது.
- நகரத்தில் உள்ளவர் கிராமவாசிக்கு விற்றுக் கொடுப்பது. (அதாவது, கிராமவாசியின்

பொருளை விற்பதற்கு இடைத் தரகராக செயல் படுவது. அவரது பொருளை தானாக விற்பனை செய்வதற்கு விட்டுவிட வேண்டும்.)

- குர்பானி கொடுத்துவிட்டு அதன் தோலை விற்று, குர்பானி கொடுத்தவர் பயன்பெறுவது.

- வீடு, தோட்டம் போன்றவற்றில் பங்காளியாக இருப்பவர், தனது பங்கை வாங்க சக்தியுள்ள மற்ற பங்காளியிடம் விற்காமல் பிறரிடம் விற்பது.

- திருகுர்ஆனை ஓதிக்காண்பித்து அதன் மூலம் சம்பாதிப்பது. (திருக்குர்ஆனை ஓத, அதற்காக கிரயம் கேட்பது)

- எத்தீம்களின் (அநாதைகளின்) பொருளை தவறான முறையில் அனுபவிப்பது.

- சூதாடுவது.

- அபகரிப்பது.

- லஞ்சம் வாங்குவது, லஞ்சம் கொடுப்பது.
- திருடுவது.
- கொள்ளையடிப்பது.
- வெற்றி (கனீமத்து)ப் பொருளை பங்கிடுவதற்கு முன்பே அதிலிருந்து அனுமதியின்றி எடுத்துக் கொள்வது.
- அநியாயமான முறையில் மக்கள் சொத்துக்களை அனுபவிப்பது.
- மக்களின் சொத்துக்களை வீணடிப்பது.
- திரும்பக் கொடுக்கும் எண்ணமின்றி கடன் வாங்குவது.
- மக்களுக்கு கொடுக்க வேண்டிய பொருளை குறைத்துக் கொடுப்பது.
- கண்டெடுக்கப்பட்ட பொருளை மறைப்பது, மறைக்க முயற்சிப்பது.
- கீழே கிடக்கும் பொருளை எடுப்பது.

- மோசடி, ஏமாற்றுதல் ஆகியவற்றின் அனைத்து வழிகளும்.
- பிறர் பொருளை அனுமதியின்றி பயன்படுத்துவது.
- பிறரை வருத்தி அவரது பொருளை பெறுவது.
- சிபாரிசு செய்ததற்காக அன்பளிப்பு பெறுவது.
- மார்க்கத்தை மறந்து (மார்க்க சட்டங்களை அலட்சியம் செய்து) உலகப் பொருளை சம்பாதிக்கப் பாடுபடுவது.

# திருமணத்தில் தடுக்கப்பட்டவை

- திருமணம் செய்யாமல் வாழ்வது, திருமணத்தை தள்ளிப்போடுவது.
- ஆண்மையை போக்கிக் கொள்வது.
- இரு சகோதரிகளை ஒருசேர மணம் முடிப்பது.
- ஒரு பெண்ணையும், அவளது மாமி அல்லது சிறிய தாயை ஒரு சேர மணமுடிப்பது.
- தனது தந்தையின் மனைவியை அல்லது திருமணம் முடிக்கத் தடை செய்யப்பட்டவளை மணமுடிப்பது.
- இணைவைக்கும் பெண்ணுடன் திருமணம் செய்வது.

- இணைவைக்கும் ஆணுக்கு முஸ்லிமான பெண்ணை மணமுடித்துக் கொடுப்பது.
- நிபந்தனையுடன், அதாவது நான் என் மகனை அல்லது சகோதரியை உனக்கு மணமுடித்துக் கொடுக்கிறேன். அதேபோல் நீ உன் மகளை அல்லது சகோதரியை எனக்கு மணமுடித்துக் கொடுக்க வேண்டும் என்று கூறுவது.
- குறிப்பிட்டக் காலத்திற்கு மட்டும் திருமணம் முடிப்பது.
- ஒரு பொறுப்பாளரும் இரு சாட்சிகளுமின்றி திருமணம் முடிப்பது.
- பெண், பெண்ணை முன்னின்று மணமுடித்து வைப்பது.
- பெண் தானாகவே மணமுடித்துக் கொள்வது.
- பெண்ணை அவளது அனுமதியின்றி மணமுடித்துக் கொடுப்பது.
- ஒருவர் பெண் பேசிக் கொண்டிருக்கும் போது

மற்றவர் குறுக்கிட்டு பெண் கேட்பது. (அவர் அனுமதியளித்தால் அல்லது அதிலிருந்து விலகி விட்டால் இவ்வாறு செய்வது தவறில்லை.)

- கணவன் இறந்து இத்தா இருக்கும் பெண்ணை தெளிவான வார்த்தையைக் கொண்டு (வெளிப் படையாக) திருமணத்தைப் பற்றிப் பேசுவது.

- ரஜஈ (ஒன்று அல்லது இரண்டு) தலாக் கொடுக்கப் பட்ட பெண்ணை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பெண் கேட்பது.

- ரஜஈ தலாக் சொன்ன பெண்ணை வீட்டைவிட்டு வெளியேற்றுவது.

- ரஜஈ தலாக் சொல்லப்பட்ட பெண் இத்தா முடியும் முன் கணவனின் வீட்டைவிட்டு வெளியேறி விடுவது. கணவனை விட்டுப் பிரிவது.

- தலாக் விடப்பட்ட பெண்ணை அவள் மீது

விருப்பமின்றி அவளுக்கு சிரமம் தருவதற்காக இத்தா முடிவதற்கு முன் அவளைத் தடுத்து வைத்துக் கொள்வது.

- ⏩ தலாக் விடப்பட்ட பெண்ணை தவணை காலத்திற்குள் அவளை தக்கவைத்துக் கொள்ளும் எண்ணமில்லாமல் அவளிடம் சேர்வது.
- ⏩ தலாக் விடப்பட்ட பெண் தான் கற்பம் தரித்திருப்பதை மறைப்பது.
- ⏩ தலாக்கை விளையாட்டாக பயன்படுத்துவது.
- ⏩ ஒருவர் இரண்டாம் திருமணத்திற்கு பெண் கேட்கும்போது அவரிடம் முதல் மனைவியை தலாக் சொல்லும்படி அந்தப் பெண் கூறுவது. அதேபோல் இரு மனைவிகளில் ஒருவர் கணவனிடம் மற்றவரை தலாக் சொல்லக் கூறுவது.
- ⏩ கணவனோ மனைவியோ தங்களிடையே உள்ள அந்தரங்க உறவுகளை வெளியே சொல்வது.

- மனைவியை கணவன் குழப்புவது, கணவனை மனைவி குழப்புவது.

- மனைவி கணவனின் செல்வத்திலிருந்து அனுமதியின்றி செலவு செய்வது.

- மாதவிடாய் காலத்தில் உறவு கொள்வது, பெண்களின் பின்புறத்தில் உறவு கொள்வது.

- கணவன் தன்னை அழைக்கும்போது தகுந்த காரணமின்றி மனைவி தவிர்ப்பது.

- தீய குணமுடைய பெண் திருந்தியபின் அவளை குத்திக்காட்டி அவளுக்கு மன வேதனையை அளிப்பது.

- கணவனின் அனுமதியின்றி அன்னியரை வீட்டிற்குள் அனுமதிப்பது. (கணவனின் பொதுவான அனுமதி போதுமானது. பெண் மார்க்க வரம்பை மீறிவிடக் கூடாது.)

- வலிமா விருந்தை தகுந்த மார்க்கக் காரணமின்றி தவிர்ப்பது.

- ‘ஆண் பிள்ளை பெற்று வளமுடன் வாழ்க’ என்று வாழ்த்துவது.
- ஜிஹாதில் கைது செய்யப்பட்ட அடிமைப் பெண் கர்ப்பம் தரித்தவளாக இருந்தால் அவள் தன் பங்கில் கிடைக்கப் பெற்றவள். அவளிடம் உறவு கொள்வது.
- மனைவியிடம் உறவு கொள்ளும்போது அவளது அனுமதியின்றி அஸ்ல் (உறவின் போது இந்திரியத்தை வெளியே விடுவது) செய்வது.
- பயணத்திலிருந்து திரும்பும்போது முன் அறிவிப்பின்றி இரவு நேரத்தில் திடீரென்று வீட்டிற்கு செல்வது.
- மனைவியின் விருப்பமின்றி முழு மஹரை அல்லது அதில் ஒரு பகுதியை நிர்ப்பந்தமாக திரும்பப் பெறுவது.
- மனைவியிடம் நிர்பந்தமாக மஹர் தொகை யைப் பெறுவதற்கு அவளைத் துன்புறுத்தி குலஆ (தலாக்) பெறவைப்பது.

- மனைவியை ளிஹார் (தாய்க்கு ஒப்பீடு) செய்வது.
- அவ்வாறு ளிஹார் செய்த பெண்ணுடன் அதற்காக கஃபாரா (குற்றப் பரிகாரம்) கொடுப்பதற்கு முன் உறவு கொள்வது.
- ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிகளில் ஒருவருக்கு மட்டும் அதிகமான அன்பு காட்டுவது.
- தலாக் விடப்பட்டப் பெண்ணை பழைய கணவருக்கு மணமுடித்து கொடுப்பதற்காக ஒருவருக்கு மணமுடிப்பது.
- இரு சாட்சிகள் இன்றி மணமுடிப்பது.

# பெண்களுக்கு தடுக்கப்பட்டவை

- பெண் அந்நியர்களுக்கு தனது அலங்காரத்தை வெளிப்படுத்துவது.
- இஸ்லாம் கூறும் பர்தா முறையின்றி வெளியே செல்வது.
- ஒரு பெண் அடுத்தவர் மீது அவதூறு கூறுவது.
- குழந்தைக்கு பாலூட்டும் காலத்தில் கொடுக்கப்படும் உதவி தொகையில் கணவன் மனைவிக்கோ மனைவி கணவனுக்கோ சிரமம் ஏற்படுத்துவது. (அதாவது தன்னிடம் வசதி இருந்தும் தன் குழந்தைக்கு பாலூட்டும் மனைவிக்கு தேவையைவிட செல்வத்தை குறைத்துக் கொடுப்பது. அல்லது மனைவி

கணவனின் வசதியைவிட அதிகமாக கேட்பது).

- குழந்தையை தாயிடமிருந்து பிரிப்பது.
- ஒரு பெண், மஹ்ரம் துணையின்றி பயணிப்பது.
- பெண் நறுமணம் பூசி ஆண்களுக்கிடையில் செல்வது.
- ஒரு ஆண் அந்நியப் பெண்ணுடன் தனித்திருப்பது. அந்நியப் பெண்களை கூர்ந்து பார்ப்பது.
- அந்நியப் பெண்ணை ஒரு முறைக்கு மேல் மறுமுறை பார்ப்பது.

# உணவில் தடுக்கப்பட்டவை

- தானாக செத்தது, அடிபட்டு செத்தது, கழுத்து இறுக்கி செத்தது, கொம்பால் குத்தப்பட்டுச் செத்தது, சிங்கம், புலி போன்ற மிருகங்கள் கடித்து செத்தது, உயரமான இடத்திலிருந்து விழுந்து செத்தது ஆகியவற்றை உண்பது.

- இரத்தம், பன்றியின் மாமிசம், அல்லாஹ் அல்லாதவற்றின் பெயர் கூறி அறுக்கப் பட்டது. சிலைகளுக்காக அறுக்கப்பட்டது. அல்லாஹ்வின் பெயரை வேண்டுமென்றே கூறாமல் அறுக்கப்பட்டது. தெருவில் சுற்றித் திரியும் கால்நடைகளின் பால் மற்றும் இறைச்சியை உண்பது.

- கோரைப் பற்களுடைய பிராணிகளை சாப்பிடுவது. (உதாரணம்: நாய், பூனை, புலி)
- கிழிக்கும் நகங்களுடைய பறவைகளை சாப்பிடுவது. (உதாரணம்: கழுகு, பருந்து, ஆந்தை)
- நாட்டுக் கழுதையை சாப்பிடுவது.
- மருந்திற்காக தவளையை கொல்வது, அதை உண்பது.
- பிராணிகளை நிற்க வைத்து அம்பெறிந்து கொலை செய்வது. உணவளிக்காமல் அவற்றைக் கட்டிப்போட்டு வைப்பது.
- பயிற்சியளிக்கப்படாத மிருகங்களைக் கொண்டு வேட்டையாடப்பட்ட பிராணிகளை உண்பது.
- பயிற்சியளிக்கப்பட்ட வேட்டை பிராணிகளுடன் பயிற்சியளிக்கப்படாத பிராணிகளும் சேர்ந்து வேட்டையாடியதை சாப்பிடுவது.

- கடினமான ஒரு கருவியைக் கொண்டு வேட்டையாடப்பட்டதை உண்பது. (ஆனால் கூர்மையான ஒன்றைக் கொண்டு வேட்டை யாடப்பட்டு பிஸ்மில்லாஹ் கூறப்பட்டால் அவற்றை உண்பது கூடும்).
- பல், நகம், எலும்பு போன்றவற்றைக் கொண்டு பிராணிகளை அறுப்பது.
- ஒரு மிருகத்தை மற்றொரு மிருகத்தின் முன்னிலையில் அறுப்பது.
- அறுக்கப்படப்போகும் மிருகத்திற்கு முன் கத்தியை தீட்டுவது.
- பெருமைக்காகவும் பகட்டுக்காகவும் அளிக் கப்படும் விருந்தில் கலந்து கொள்வது.
- போதையேறிய பழரசத்தை அருந்துவது.
- ஹராமான முறையில் செய்யப்பட்ட உணவை உண்பது.

# ஆடை அலங்காரத்தில் தடுக்கப்பட்டவை

- ஆடைகளில் வரம்பு மீறி செலவு செய்வது.
- ஆண்கள் தங்கம் அணிவது.
- நடு விரலிலும், ஆள்காட்டி விரலிலும் மோதிரம் அணிவது.
- இரும்பு மோதிரம் அணிவது, ஆடையின்றி இருப்பது, நடப்பது, தொடையை பிறருக்குக் காட்டுவது.
- ஆடைகளை கரண்டைக்குக் கீழ் தொங்க விடுவது. பெருமையுடன் ஆடைகளை தரையில் இழுத்துச் செல்வது.
- பகட்டு ஆடைகளை அணிவது.
- ஆண்கள் பட்டாடை அணிவது.
- ஆண்கள் பெண்களின் ஆடைகளை,

பெண்கள் ஆண்களின் ஆடைகளை அணிவது.

- பெண்கள் இறுக்கமான அல்லது மெல்லிய அல்லது குட்டையான ஆடைகளை அணிவது.

- மாற்றுமதத்தவர்கள் அணியும் ஆடைகளை அணிவது.

- நின்றுகொண்டு 'ஷூ' போன்ற காலணிகளை அணிவது. (அதாவது நின்று கொண்டு அணிந்தால் சிரமம் ஏற்படும் என்றிருக்கும் காலணிகளை உட்கார்ந்து கொண்டுதான் அணிய வேண்டும்.)

- ஒரு காலணியை மட்டும் அணிந்து கொண்டு நடப்பது.

- இணைவைப்பவர்களைப் போல் மீசையை வளர்த்து தாடியை சிரைப்பது.

- முகம், புருவத்தின் முடிகளை பிடுங்குவது.

- பெண் மொட்டையடித்துக் கொள்வது.
- சவரிமுடி கட்டுவது.
- நரை முடியைப் பிடுங்குவது.
- நரைக்கு கருநிறம் பூசுவது (டை அடிப்பது).
- தலையில் சில பகுதிகளை சிரைத்து சில பகுதியை விட்டுவிடுவது.
- உயிருள்ளவற்றை உருவமாக வரைவது.
- பட்டாடையில் அமர்வது.
- புலித்தோல் அல்லது தற்பெருமை யூட்டும்படியான விரிப்புகளில் அமர்வது, அவைகளைப் பயன்படுத்துவது.
- சுவர்களை திரையிட்டு அலங்கரிப்பது.

# பேசுவதில்
# தடுக்கப்பட்டவை

- பொய் சாட்சி சொல்வது.
- ஒழுக்கமான பெண் மீது பழி சுமத்துவது.
- பெண்களின் தன்மைகளைக் கூறி கவிதை எழுதுவது, பாடுவது.
- ஒழுக்கமானவர் மீது பழி சுமத்துவது.
- இட்டுக் கட்டுவது.
- குத்தலாகப் பேசுவது, ஏசுவது.
- இழிவான பட்டப் பெயர்களிட்டு அழைப்பது.
- புறம் பேசுவது.
- கோள் சொல்வது.

- பரிகாசிப்பது.
- பரம்பரைகளைக் கூறி பெருமைப் பேசுவது.
- பரம்பரையைக் கூறி குத்திக் காட்டுவது.
- தீய வார்த்தைகளைப் பேசுவது.
- அசிங்கமாகப் பேசுவது, அருவறுப்பாகப் பேசுவது.
- தீமையைப் பகிரங்கப்படுத்துவது. (ஆனால் அநீதி இழைக்கப்பட்டவர் தனக்கு இழைக் கப்பட்டக் கொடுமையைப் பகிரங்கப் படுத்துவது அனுமதிக்கப்பட்டுள்ளது.)
- பொய் பேசுவது, பொய்களில் மிக கடுமை யான பொய் அல்லாஹ்வின் மீதும், அவனது தூதரின் மீதும் பொய் பேசுவது.
- கனவு கண்டதாக பொய்யுரைப்பது.
- ஒருவர் தன்னைத்தானே புகழ்ந்து கொள்வது.
- மூவர் இருக்க இருவர் தனித்து ரகசியம் பேசுவது.

- பாவமான காரியத்திற்கும் மார்க்கத்திற்கு முரணான செயல்களுக்கும் ஆலோசனை செய்வது.
- முஃமின்களை அல்லது சபிக்கக் கூடாதவர் களை சபிப்பது.
- நபி (ஸல்) அவர்களின் சப்தத்திற்கு மேல் சப்தத்தை உயர்த்துவது. அவர்களது முன்னிலையில் சப்தமிட்டு பேசுவது. (நபி மொழியை படிப்பவருக்கு முன் சப்தத்தை உயர்த்துவதும் இதில் அடங்கும்.)
- நபியின் அடக்கஸ்தலத்திற்கு முன் சப்தத்தை உயர்த்துவது.
- இறந்தவர்களை ஏசுவது.
- சேவலை ஏசுவது.
- காற்றை ஏசுவது.
- சுகவீனம் ஏற்படும்போது நோயை குறையை ஏசுவது.

- ஷைத்தானை ஏசுவது. (நாம் ஷைத்தானின் தீங்கிலிருந்து பாதுகாப்புத் தேடவேண்டுமே தவிர அவனை ஏசக்கூடாது.)
- இறந்தவர்களிடம் பிரார்த்தனை செய்வது. (தேவைகளைக் கேட்பது.)
- நன்மையை வேண்டியோ தீமையிலிருந்து காக்கவோ இறந்தவர்களிடம் பிரார்த்திப்பது.
- தன்னை, குழந்தைகளை, வேலை செய்பவர்களை, பொருட்களை சபிப்பது.
- ஒருவர் 'எனது ஆத்மா தீயதாகிவிட்டது, கெட்டு விட்டது' என்று கூறுவது.
- நான் இன்ன இறைவசனத்தை மறந்து விட்டேன் என்று கூறுவது. (எனக்கு இன்ன வசனம் மறக்கடிக்கப்பட்டது என்றுதான் சொல்ல வேண்டும்.)
- அல்லாஹ்விடம் 'நீ நாடினால் என்னை மன்னித்துவிடு' என்று பிரார்த்திப்பது. (மாறாக, உறுதியாக கேட்கவேண்டும்).

- நிராகரிப்பாளர்களை, முனாஃபிக்குகளைப் பார்த்து தலைவர் என்று கூறுவது.
- ஒருவரைப் பார்த்து ‘அல்லாஹ் உன்னை கேவலப்படுத்தட்டும்’ என்று கூறுவது.
- கணவன் மனைவியைப் பார்த்து அல்லாஹ் உன்னை கேவலப்படுத்தட்டும்’ என்று கூறுவது.
- ஒருவரை சந்திக்கும்போது ஸலாம் சொல்வதற்கு முன் பேசுவது.
- ஒருவர் ஒருவரை புகழ்ந்து பேசிக் கொள்வது.
- பேசாமல் துண்டித்து வாழ்வது.
- ஒருவரை அவர்முன் புகழ்வது.

# உண்பது, குடிப்பதில் தடுக்கப்பட்டவை

- சேர்ந்து சாப்பிடும்போது உணவுத் தட்டில் அடுத்தவர் முன் இருப்பவற்றிலிருந்து உண்பது.
- தட்டின் நடுவிலிருந்து உண்பது (ஓரத்திலிருந்து உணவை சாப்பிட வேண்டும். அல்லாஹ்வின் பரகத் (அருள்) நடுவில் இறங்குகிறது.)
- கீழே விழுந்த கவளத்தை, உணவை எடுத்துச் சாப்பிடாமல் அப்படியே விட்டு விடுவது. (மாறாக அதை சுத்தம் செய்து சாப்பிட வேண்டும்.)
- தங்கம் வெள்ளிப் பாத்திரங்களில் சாப்பிடுவது, குடிப்பது.
- நின்றுகொண்டு குடிப்பது.

- உடைந்த பாத்திரத்தின் ஓட்டையிலிருந்து குடிப்பது.
- குடிக்கும்போது பாத்திரத்தில் மூச்சு விடுவது. ஒரே மூச்சில் குடிப்பது. (மாறாக மூன்று மூச்சில் குடிக்க வேண்டும்.)
- இடது கையால் குடிப்பது, சாப்பிடுவது.
- கூட்டாக சாப்பிடும்போது பழம் முதலியவற்றை இரண்டிரண்டாக எடுத்துச் சாப்பிடுவது. (ஆனால் உடன் சாப்பிடுபவர் அனுமதித்தால் சேர்த்து சாப்பிடலாம்.)
- மாற்றார்களின் பாத்திரங்களை பயன்படுத்துவது. (வேறு வழியில்லையெனில் நன்கு கழுவிய பிறகே பயன்படுத்த வேண்டும்.)
- மது பரிமாறப்படும் மேஜைகளிலும், விரிப்புகளிலும் உணவகங்களிலும் உணவு உண்பது.
- சாய்ந்து கொண்டு சாப்பிடுவது.

# தூக்கத்தில் தடுக்கப்பட்டவை

- தடுப்பு இல்லாத மாடிகளில் தூங்குவது. (ஏனெனில் புரண்டு படுக்கும்போது கீழே விழும் அபாயம் உண்டு.
- பெருந்தொடக்கு ஏற்பட்ட பின் உழு செய்யாமல் தூங்குவது.
- விரிப்பிலிருந்து எழுந்த பின் சிறிது நேரம் கழித்து அதே விரிப்பில் மீண்டும் தூங்க நேர்ந்தால் அதை மூன்று முறை உதறாமல் தூங்குவது.
- பள்ளத்தாக்கின் நடுவில், நீரோடைகளில் தூங்குவது.
- தனியாக இரவில் தூங்குவது.

- தூங்கும்போது நெருப்பை அணைக்காமல் எறிந்த நிலையில் விடுவது.
- கையில் கொழுப்புகள், உணவு மீதம் உள்ள நிலையில் கை கழுவாமல் தூங்குவது.
- குப்புறப்படுத்து தூங்குவது.
- கைலி (லுங்கி) போன்ற ஆடை அணிந்திருக்கும்போது மல்லாந்து படுத்துக் கொண்டு ஒரு காலின் மேல் மற்றொரு காலை வைத்துக்கொண்டு படுப்பது. (மர்மஸ்தானம் தெரியும் என்ற பயம் இல்லையெனில் இவ்வாறு தூங்குவது தவறில்லை.)
- தீய கனவுகளை பிறரிடம் கூறுவது அல்லது அதற்கு விளக்கம் கூறுவது.

# பொதுவாக தடுக்கப்பட்டவை

- அநியாயமாக ஓர் உயிரைக் கொல்வது.
- சிசுக்களைக் கொல்வது.
- தற்கொலை செய்வது.
- விபசாரம் செய்வது.
- ஓரின சேர்க்கை புரிவது.
- சுய இன்பம் அடைவது.
- திருடுவது.
- மது அருந்துவது, அதை தயார் செய்வது, அதை விற்பது, எடுத்துச் செல்வது.
- பெற்றோருக்கு மாறு செய்வது, அவர்களை அதட்டுவது, மிரட்டுவது, சீ என்று அவர்களை சொல்வது.

- போரில் புறமுதுகுக் காட்டி ஓடுவது. (மார்க்கக் காரணங்கள் இருப்பின் தவறில்லை.)
- முஃமின்களுக்கு மனவேதனை தருவது, அவர்கள் செய்யாத குற்றத்தை அவர்கள் மீது சுமத்துவது, அவர்களைக் குறை கூறுவது.
- அல்லாஹ்வுக்கு அதிருப்தியளித்து மக்களை மகிழ்விப்பது, திருப்திப்படுத்துவது.
- ஒப்பந்தங்களை உறுதி செய்தபின் அவற்றை முறிப்பது.
- இசைப்பது, இசைக் கருவிகளைப் பயன்படுத்துவது, இசையைக் கேட்பது.
- தன் தந்தை அல்லாத ஒருவரை தந்தை என்று கூறுவது.
- நெருப்பால் தண்டிப்பது, உயிருள்ளவற்றை, இறந்தவற்றை நெருப்பிட்டுக் கொளுத்துவது.
- இறந்தவர்களின் உடல் உறுப்புகளை வெட்டுவது, சிதைப்பது.

- பாவமான, தவறான, அநியாயமான காரியங்களில் பிறருக்கு உதவுவது.
- முஸ்லிம்களுக்கு எதிராக ஆயுதம் ஏந்துவது.
- முஸ்லிம்களுக்கு கெடுதல் விளைவிப்பது, அவர்களுக்கு சூழ்ச்சி செய்வது.
- மார்க்க ஞானமின்றி தீர்ப்பளிப்பது.
- அல்லாஹ்வுக்கு பிடிக்காதவற்றில் (பாவமான காரியங்களில்) பிறருக்கு கீழ்ப்படிவது. (அவர் யாராக இருப்பினும் சரியே!)
- பொய் சத்தியம் செய்வது.
- வீண் சத்தியம் செய்வது.
- ஒழுக்கமான பெண்களை பழி சுமத்தியவர்கள் தவ்பா செய்து திருந்தவில்லையெனில் அவர்களது சாட்சியை ஏற்றுக்கொள்வது.
- அல்லாஹ் அனுமதித்தவற்றை ஹராம் என்று விலக்கிக்கொள்வது.

- ஷைத்தானின் வழிகளை பின்பற்றுவது.
- பிறர் பேசிக்கொண்டிருப்பதை அவர்களு டைய அனுமதியின்றி கேட்பது.
- பிறர் வீட்டில் அனுமதியின்றி நுழைவது.
- தனக்கு சொந்தமல்லாததை தனக்கு சொந்தமானது என்று கூறுவது.
- தான் அனுபவிக்காததை அனுபவித்ததாகக் கூறுவது, தன்னிடம் இல்லாததை இருப்ப தாகக் கூறுவது.
- செய்யாத ஒன்றைக் கூறி புகழ் தேடுவது.
- இறை கோபத்திற்கும் தண்டனைக்கும் ஆளானவர்களின் ஊர்களுக்குள் செல்வது. (ஆனால், படிப்பினை பெறும் நோக்கத்துடன் அல்லது அழுதவர்களாக அவ்வூர்களுக்குச் செல்வது கூடும்.)
- பாவமான விஷயத்தில் அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்வது.

- பிறர் குறைகளை ஆராய்வது.
- நல்ல ஆண், பெண்கள் மீது கெட்ட எண்ணம் கொள்வது.
- பொறாமை கொள்வது.
- குரோதம் கொள்வது.
- உறவுகளை, சமுதாயத்தை புறக்கணித்து வாழ்வது.
- அசத்திய வழியில் செல்வது.
- பெருமை, பகட்டு, தற்பெருமை, அகந்தை, அகம்பாவம், மமதை கொள்வது.
- உலகப் பொருட்களைக் கொண்டும், செல்வத்தைக் கொண்டும் பெருமை கொள்வது.
- பூமியில் பெருமையாக நடந்து செல்வது.
- மக்களை விட்டும் முகத்தை திருப்பிக் கொள்வது. (அதாவது மக்களிடம்

பழகுவதை தவிர்ப்பது பெருமையின் அடையாளமாகும்.)

- கொடுத்த தர்மத்தை திரும்பப் பெறுவது. (தர்மம் கொடுத்த பொருளை விலைக்குக்கூட திரும்ப வாங்கக் கூடாது.)
- தந்தை தனது மகனைக் கொலை செய்து விட்டால் அவரைக் கொல்வது.
- பிறரின் மர்மஸ்தானத்தைப் பார்ப்பது. (இந்த சட்டத்தில் ஆண், பெண் இருபாலாரும் சமமானவர்களே.)
- பிறரின் தொடையைப் பார்ப்பது. (அவர் இறந்தவராயினும் சரியே!)
- சங்கைமிகு (ரஜப், துல் கஅதா, துல்ஹஜ், முஹர்ரம் ஆகிய) மாதங்களின் கண்ணியத்தை பாழ்படுத்துவது.
- கெட்ட வழியில் சம்பாதித்து நல்ல வழியில் செலவு செய்வது.

- தொழிலாளியிடம் வேலை வாங்கிக் கொண்டு கூலி கொடுக்காமல் இருப்பது.
- பிள்ளைகளுக்கு சமத்துவமின்றி அன்பளிப்பு வழங்குவது.
- வஸிய்யத் செய்வதில் தவறிழைப்பது.
- வாரிசுக்கு வஸிய்யத் செய்வது.
- முழு சொத்தை வஸிய்யத் செய்வது. (அப்படி வஸிய்யத் செய்தாலும் மூன்றில் ஒன்றுதான் செல்லுபடியாகும்.)
- அண்டை வீட்டிலுள்ள பெண்களிடம் விபசாரம் செய்வது. (இது மற்ற பெண்களிடம் விபசாரம் செய்வதைவிட பாவத்தால் மிக கடுமையானது.)
- அண்டை வீட்டாருக்கு தொந்தரவு தருவது.
- மூன்று நாள்களுக்கு மேல் ஒரு முஸ்லிமுடன் மார்க்கக் காரணமின்றி பேசாமல் இருப்பது.
- கற்களை சுண்டி எறிந்து விளையாடுவது.

(இதன் மூலம் பிறருக்கு தீங்கு ஏற்படலாம். மேலும் கண். பற்களில் பட்டு காயம் ஏற்படலாம்.)

- பிறர் மீது அத்துமீறுவது. (ஏசுவது, சண்டையிடுவது, உரிமையைப் பறிப்பது.)
- போட்டிக்காக ஒருவர் மற்றவரைவிட சப்தமிட்டுக் குர்ஆன் ஓதுவது.
- இருவர் பேசிக்கொண்டிருக்கும்போது அனுமதியின்றி குறுக்கிடுவது, அனுமதி யின்றி அவர்களைப் பிரித்து அவர்களுக்கு குறுக்கே செல்வது.
- ஒருவர் அமர்ந்திருக்கும்போது அவரை எழுப்பிவிட்டு அந்த இடத்தில் அமர்வது.
- ஒருவருடன் இருக்கும்போது அவர் அனுமதியின்றி எழுந்துச் செல்வது.
- அமர்ந்திருப்பவருடைய தலைக்குப் பின்னால் நிற்பது.

- பாதி வெயிலிலும் பாதி நிழலிலும் உட்காருவது. (ஏனெனில் இது ஷைத்தானின் முறையாகும்.)
- மக்களுக்கு துன்பம் தருவது.
- மக்கள் மீது வாளை ஓங்குவது.
- இரும்புப் பொருள்களைக் கொண்டு ஒருவரை சுட்டிக்காட்டுவது.
- வாள், கத்தி போன்றவற்றை உருவிய நிலையில் எடுத்துச் செல்வது.
- மார்க்கத்தில் தடையில்லாமல் இருக்கும்போது அன்பளிப்பைத் தவிர்ப்பது.
- தேவையான இடங்களில் தேவைக்கு அதிகமாக செலவு செய்வது.
- தேவையில்லாத இடங்களில் செலவு செய்வது.
- விருந்தாளிக்காக சிரமமெடுத்து பகட்டாக விருந்து செய்வது.

- புத்திசுவாதீனம் இல்லாதவர்களிடம் அவர்களது பொருளை ஒப்படைப்பது.
- ஆண், பெண்களில் அல்லாஹ் சிலருக்கு கொடுத்திருக்கும் சிறப்பைப் பார்த்து மற்றவர்கள் ஆசைப்படுவது.
- தர்கித்துக் கொள்வது, சண்டையிட்டுக் கொள்வது, வீண் விவாதங்கள் செய்வது.
- விபசாரிகளை தண்டிக்கும்போது கருணை காட்டுவது.
- தர்மம் செய்தபின் அதை சொல்லிக் காண்பிப்பது.
- தர்மம் வாங்கியவரை துன்புறுத்துவது.
- தெரிந்த சாட்சியத்தை மறைப்பது.
- அநாதைகளிடம் இரக்கமின்றி நடப்பது.
- யாசிப்பவர்களை விரட்டுவது.
- அசுத்தமானது, ஹராமானது ஆகியவற்றை மருந்துக்கு உபயோகிப்பது. (அல்லாஹ்

இந்த சமுதாயத்திற்கு அசுத்தமான, ஹராமான பொருளில் நோய் நிவாரணத்தை வைக்கவில்லை.)

- போரில் பெண்களை, குழந்தைகளை கொல்வது.
- தேவையற்ற சிரமம் எடுப்பது.
- ஒரு மார்க்க அறிஞரிடம் அவரை குழப்பத்திலும் சந்தேகத்திலும் ஆழ்த்தும் விஷயங்களைக் கேட்பது. அல்லது தனது நுண்ணறிவையும் திறமையையும் வெளிப் படுத்துவதற்காக நடக்காத கற்பனையான விஷயங்களைப் பற்றி கேட்பது.
- எவ்வித பயனுமற்ற வீண் விவாதங்களில் ஈடுபடுவது.
- செஸ், தாயம் மற்றும் இதுபோன்ற விளையாட்டுகள் விளையாடுவது.
- கால்நடைகளை சபிப்பது.

- சோதனைக் காலத்தில் முகத்தில் அறைந்து கொள்வது, கீறிக் கொள்வது.
- ஆட்சியாளர் குடிமக்களுக்கு மோசடி செய்வது.
- உலக விஷயத்தில் தன்னை விட தாழ்ந்த நிலையில் உள்ளவரைப் பார்க்காமல் உயர்ந்த நிலையில் உள்ளவரைப் பார்ப்பது. (இது அல்லாஹ் தனக்கு கொடுத்த அருளை உயர்வாகக் கருதாமல் தாழ்வாக கருதுவதற்கு வழி வகுக்கும்.)
- பெருமை பேசுவது.
- வாக்குக்கு மாறு செய்வது.
- அமானிதத்திற்கு மோசடி செய்வது.
- கற்ற கல்வியை மறப்பது அல்லது மறைப்பது.
- தவறான விஷயத்தில் பரிந்துரை செய்வது.
- தேவையின்றி பிறரிடம் யாசகம் கேட்பது.

- பிரயாணத்தின் போது மணி ஓசை எழுப்புவது. (அதாவது வாகனத்தில் மணி கட்டுவது.)
- நாய்களை வளர்ப்பது. (கால்நடைகள், விவசாயம், தோட்டங்கள் முதலியவற்றின் பாதுகாப்பிற்காக அல்லது வேட்டைக்காக வளர்க்கலாம்.)
- ஒழுக்கம் கற்பிக்க கண்டிக்கும்போது அதிகபட்சம் பத்து அடிக்குமேல் அடிப்பது.
- அதிகமாக சிரிப்பது.
- நோயாளிகளை உண்பதற்கும், பருகு வதற்கும் நிர்ப்பந்திப்பது. (ஏனெனில் அல்லாஹ் அவர்களுக்கு உணவளிக்கிறான், நீர் புகட்டுகிறான்.)
- குஷ்டரோகிகளை உற்றுப் பார்ப்பது.
- ஒரு முஸ்லிம் மற்ற முஸ்லிமை பயமுறுத்துவது.

- தான் கொடுத்த அன்பளிப்புகளையோ, வெகுமதிகளையோ திரும்பப் பெறுவது. (ஆனால் தந்தை பிள்ளைக்குக் கொடுத்த வற்றை திரும்பப் பெறலாம்.)
- இடது கையால் கொடுப்பது, வாங்குவது.
- நிபந்தனையிட்டு நேர்ச்சை செய்வது. (இதனால் அல்லாஹ்வின் விதியை மாற்ற முடியாது. இவ்வாறு கஞ்சன்தான் செய்வான்.)
- மருத்துவ ஞானமின்றி வைத்தியம் பார்ப்பது.
- எறும்பு, தேனீ, மரங்கொத்திப் பறவை (ஹுத் ஹுத்) இவற்றைக் கொல்வது.
- தனியாக பயணம் செய்வது.
- தனது சுவரில் பலகை ஒன்றை நட்டுக்கொள்ள அண்டை வீட்டாரைத் தடுப்பது.
- கையால் சைகை செய்து ஸலாம் சொல்வது.
- தெரிந்தவர்களுக்கு மட்டும் ஸலாம்

சொல்வது. (தெரிந்தவர்கள், தெரியாதவர்கள் எல்லோருக்கும் ஸலாம் சொல்ல வேண்டும்.)

- ஸலாம் சொல்லாமல் பேசியவருக்கு பதில் சொல்வது.
- ஓர் ஆண் மற்றோர் ஆணை, ஒரு பெண் மற்றொரு பெண்ணை இச்சையுடன் முத்தமிடுவது.
- கோபமாக இருக்கும்போது தீர்ப்பளிப்பது.
- அடுத்தவரின் வாதத்தை கேட்காமல் ஒருவரின் வாதத்தை மட்டும் கேட்டுவிட்டு தீர்ப்பளிப்பது.
- சூரியன் மறையும் (மஃரிப்) நேரத்தில் பிள்ளை களை வீட்டிலிருந்து வெளியில் அழைத்துச் செல்வது. (ஏனெனில், அது ஷைத்தான்கள் பரவும் நேரமாகும். முழுமையாக இருட்டிய பின் வேண்டுமானால் அழைத்துச் செல்லலாம்.)
- இரவில் மரத்திலிருந்து பழங்களை பறிப்பது.

- ▶▶ இரவில் அறுவடை செய்வது. (இவ்வாறு செய்வதால் ஏழை, ஏளியோருக்கு அது தெரியாமல் ஆகிவிடலாம். அறுவடை அன்றே அதில் கடமையான தர்மத்தை கொடுத்துவிட வேண்டுமென்று அல்லாஹ் கூறியிருப்பதால் ஏழைகளை தவிர்ப்பதற்காக இவ்வாறு சூழ்ச்சி செய்வது கூடாது.)

- ▶▶ கடைத் தெருவில் நடந்து செல்லும்போது மற்றவர்களுக்கு இடையூறு தரும்படியான, காயப்படுத்தும்படியான பொருள்களை எடுத்துச் செல்வது.

- ▶▶ காலரா பரவியிருக்கும் ஊரிலிருந்து வெளியேறுவது. அந்த ஊருக்குச் செல்வது.

- ▶▶ வெள்ளி, சனி, ஞாயிறு, புதன் ஆகிய கிழமை களில் இரத்தம் குத்தி எடுப்பது. (வியாழன், திங்கள் செவ்வாய் ஆகிய தினங்களில் எடுக்கலாம்.)

- ▶▶ தும்மியதற்குப்பின் அல்லாஹ்வை புகழாத

வருக்கு (அல்ஹம்துலில்லாஹ் என்று சொல்லாதவருக்கு) யர்ஹமுக்கல்லாஹ் (அல்லாஹ் உமக்கு கருணை காட்டுவானாக) என்று சொல்வது.

- கஅபாவின் திசையில் எச்சில் துப்புவது.
- இரவில் பயணம் செய்யும்போது பாதையின் ஓரங்களில் ஓய்வெடுப்பது.
- காற்று பிரியும் சத்தத்தைக் கேட்டு சிரிப்பது (இது எல்லோருக்கும் ஏற்படும் இயற்கையாகும். அவ்வாறு சிரிப்பதால் பிறருக்கு சங்கடம் ஏற்படலாம்.)
- நறுமணம், தலையணை, துளசி ஆகியவற்றை ஏற்றுக்கொள்ள மறுப்பது.

# 100 பெரும் பாவங்கள்

**ஆசிரியர்: அஷ்ஷைக் ஸாலிஹ் இப்னு அப்துல்லாஹ்**

இறை நிராகரிப்பை ஏற்படுத்தும் பெரும் பாவங்கள், மிகப்பெரும் பாவங்கள், மகா நாசத்தை ஏற்படுத்தும் பாவங்கள், சுவனம் செல்வதற்குத் தடையான பாவங்கள், அழிவை ஏற்படுத்தும் பாவங்கள் என திருகுர்ஆனிலும் ஹதீஸிலும் பாவங்களைப் பற்றி பலவாறாக வர்ணிக்கப்பட்டுள்ளது.

திருமறையிலும் நபிமொழியிலும் பெரும் பாவம், பெரும் குற்றம் என்று கூறப்பட்டவைகளும், எந்த செயலுக்கு இம்மையிலும் மறுமையிலும் பெரும் தண்டனை உண்டென சொல்லப்பட்டுள்ளதோ அவைகளும், எந்த செயல்களைச் செயல்பவர்கள்

சபிக்கப்பட்டவர்கள், சுவனம் புகமாட்டார்கள் என்று வந்துள்ளதோ அச்செயல்களும் பெரும் பாவங்கள், பெருங்குற்றங்கள் என்று சொல்லப்படும்.

## பெரும் பாவங்களை விட்டு விலகுவதன் சிறப்பு

உங்களுக்கு விலக்கப்பட்ட பெரும் பாவமான காரியங்களிலிருந்து நீங்கள் விலகிக் கொண்டால், உங்களுடைய (மற்ற) சிறிய பாவங்களுக்கு (அதனை) நாம் பரிகாரமாக்கி உங்களை (மிக்க) கண்ணியமான இடங்களிலும் நுழைவிப்போம். (அல்குர்ஆன் 4 : 31)

வானங்கள், பூமியிலுள்ளவைகள் அனைத்தும் அல்லாஹ்வுக்குரியனவே. ஆகவே, தீமை செய்தவர்களுக்கு அவர்களுடைய (தீய) செயலுக்குத் தக்கவாறு (தீமையைக்) கூலியாகக் கொடுக்கின்றான். நன்மை செய்தவர்களுக்கு நன்மையை கூலியாகக் கொடுக்கின்றான்.

(நன்மை செய்யும்) அவர்கள் (ஏதும் தவறாக

ஏற்பட்டுவிடும்) அற்பமான பாவங்களைத்தவிர மற்ற பெரும் பாவங்களிலிருந்தும், மானக்கேடான விஷயங்களிலிருந்தும் விலகியிருப்பார்கள். நிச்சயமாக உங்கள் இறைவன் மன்னிப்பதில் மிக்க தாராளமானவன். உங்களைப் பூமியிலிருந்து உற்பத்தி செய்த சமயத்தில் (உங்கள் தன்மையை) அவன் நன்கறிவான். நீங்கள் உங்கள் தாயின் வயிற்றில் கர்ப்பப்பிண்டமாக இருந்த சமயத்திலும் உங்களை அவன் நன்கறிவான். ஆகவே உங்களை தூய்மையானவர்கள் என நீங்களே தற்புகழ்ச்சி கொள்ளாதீர்கள். உங்களில் அல்லாஹ்வை அஞ்சிக் கொள்பவர்கள் யாரென்பதை அவன் நன்கறிவான். (அல்குர்ஆன் 53 : 31)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஐந்து நேரத் தொழுகைகள், ஜுமுஆ தொழுகைகள், ரமழான் மாதங்கள் ஆகிய இவைகள் அவைகளுக்கு மத்தியில் நிகழும் பாவங்களைப் போக்கி விடுகின்றன. ஆனால் ஒரு நிபந்தனை, பெரும் பாவங்களைவிட்டும் விலகி இருக்கவேண்டும். (முஸ்லிம்)

# இறை நிராகரிப்பை ஏற்படுத்தும் பெரும்பாவங்கள், மிகப்பெரும் பாவங்கள், மகா நாசத்தை ஏற்படுத்தும் பாவங்கள்

**1. அல்லாஹ்வுக்கு இணைவைப்பது.**

பாவங்களில் மிகப்பெரிய பாவம் அல்லாஹ்விற்கு இணைவைப்பதாகும். (புகாரி, முஸ்லிம்)

**2. தொழுகையை விடுவது.**

முஃமினுக்கும், ஷிர்க் மற்றும் குஃப்ருக்கும் இடையில் தொழுகையை விடுவது தவிர வேறொன்றும் இல்லை. அதாவது தொழுகையை விட்டவன் காஃபிராகி விடுவான். (முஸ்லிம்)

**3. பெற்றோருக்கு மாறு செய்வது**

**4. பொய் சாட்சி சொல்வது**

**5. கொலை செய்வது**

மிகப்பெரும் பாவங்களாவன: அல்லாஹ்விற்கு இணைவைப்பது, பெற்றோருக்கு மாறுசெய்வது, பொய் சாட்சி சொல்வது, கொலை செய்வது. (முஸ்லிம்)

## 6. பெற்றோரை ஏசுவது.

மிகப்பெரும் பாவங்களில் ஒன்று பெற்றோரை ஏசுவது என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்போது அவர்களிடம் "அல்லாஹ்வின் தூதரே! ஒருவர் எவ்வாறு தனது பெற்றோரை ஏசுவார்" என்று கேட்கப்பட்டது. அதற்கு, "ஒருவர் இவரது பெற்றோரை ஏசும்போது அவர் இவரது பெற்றோரை ஏசுவார் இதுதான் பெற்றோரை ஏசுவதாகும்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரி, முஸ்லிம்)

## 7. சூனியம் செய்வது.

## 8. வட்டி வாங்கி உண்பது.

## 9. அனாதையின் சொத்தை உண்பது.

## 10. போரில் புறமுதுகுக் காட்டி ஓடுவது.

## 11. ஒழுக்கமுள்ள இறை நம்பிக்கைக் கொண்ட அப்பாவி பெண்கள்மீது பழி சுமத்துவது.

மகா நாசத்தை ஏற்படுத்தும் ஏழு பெரும் பாவங்களை விட்டும் விலகிக் கொள்ளுங்கள்.

அவை: அல்லாஹ்விற்கு இணைவைப்பது, சூனியம் செய்வது, அல்லாஹ் புனிதமாக்கிய உயிரைக் கொல்வது, வட்டி வாங்கி உண்பது, அனாதையின் சொத்தை விழுங்குவது, போரில் புறமுதுகுக் காட்டுவது, ஒழுக்கமான இறை நம்பிக்கைக் கொண்ட அப்பாவி பெண்கள்மீது பழி சுமத்துவது. (புகாரி, முஸ்லிம்)

# சொர்க்கம் செல்வதற்குத் தடையான பாவங்கள்

**12. இறை நம்பிக்கையின்றி இருப்பது.**

இறை நம்பிக்கையாளரைத் தவிர மற்றவர் சுவனம் புகமாட்டார். நீங்கள் அல்லாஹ்வை நம்பிக்கைக் கொள்ளாதவரை சொர்க்கம் புகமாட்டீர்கள் (முஸ்லிம்)

**13. அண்டை வீட்டாருக்குத் தொந்தரவு தருவது.**

அண்டை வீட்டாருக்கு தீங்கிழைப்பவர் சொர்க்கம் புகமாட்டார். (முஸ்லிம்)

## 14. பெருமை கொள்வது.

அணுவளவும் பெருமை உள்ளவர் சொர்க்கம் புகமாட்டார். (முஸ்லிம்)

## 15.கோள் சொல்வது - இரட்டை முகம் காண்பிப்பது.

கோள் சொல்பவர் சொர்க்கம் புகமாட்டார். அல்லாஹ்வின் முன்னிலையில் மறுமையில் மிகக் கெட்டவர்களில் இரு முகமுடையவனும் ஒருவன் ஆவான். (முஸ்லிம்)

## 16. தற்கொலை செய்தல்.

யார் விஷம் குடித்து தற்கொலை செய்து கொள்கிறானோ அவன் அதே விஷத்தைக் குடிப்பது கொண்டு நரக நெருப்பில் என்றென்றும் நிரந்தரமாக வேதனை அனுபவிப்பான். (புகாரி, முஸ்லிம்)

யார் எப்படி தற்கொலை செய்து கொள்கிறாரோ.... அவ்வாறே நரகத்தில் தண்டனை கொடுக்கப்படுவார்.

## 17. உறவுகளைத் துண்டிப்பது.

உறவுகளைத் துண்டிப்பவர் சொர்க்கம் புகமாட்டார். (முஸ்லிம்)

**18. தடுக்கப்பட்ட வழிகளில் பொருள் சம்பாதித்து, உண்பது.**

ஹராமில் வளர்ந்த உடல் சொர்க்கம் நுழையாது. (அஹ்மது, இப்னு ஹிப்பான்)

**19. செய்த உபகாரத்தைச் சொல்லிக் காட்டுவது.**

**20. மது அருந்துவது.**

**21. சூனியத்தை நம்புவது.**

**22. குறி பார்ப்பது.**

**23. விதியை மறுப்பது.**

செய்த உபகாரத்தை சொல்லிக் காண்பிப்பவர், மது அருந்துபவர், சூனியத்தை நம்புபவர், குறி பார்ப்பவர், விதியை மறுப்பவர் ஆகிய இவர்கள் சொர்க்கம் புகமாட்டார்கள். (அஹ்மது)

**24. கடனை அடைக்க வழியில்லாமல் இறப்பது.**

இறந்தவரை தொழ வைப்பதற்காக நபி (ஸல்) அவர்களிடம் கொண்டு வரப்படும். அவர் மீது கடன் இருப்பின் "இவர் கடனை நிறைவேற்ற ஏதும் வழி செய்துள்ளாரா?" என்று விசாரிப்பார்கள். அவருக்குக்

கடனை அடைக்கும் அளவு சொத்து உள்ளது என்று கூறப்பட்டால் தொழவைப்பார்கள். அவருக்கு சொத்து இல்லையெனில் “உங்களின் தோழருக்கு நீங்கள் தொழுது கொள்ளுங்கள்” என்று நபி (ஸல்) அவர்கள் கூறிவிடுவார்கள். மார்க்கப் போரில் உயிர் நீத்தவருக்கு அனைத்தும் மன்னிக்கப்படும். ஆனால், கடனைத்தவிர. (முஸ்லிம்)

## 25. பெண், ஆணைப்போன்று நடந்து கொள்வது.

## 26. குடும்பத்தில் நடக்கும் கெட்ட நடத்தையை கண்டும் காணாமல் இருப்பது.

மூன்று நபர்கள் சொர்க்கம் புகமாட்டார்கள், மறுமையில் அல்லாஹ் அவர்களை பார்க்கவும் மாட்டான். அவர்கள்: பெற்றோருக்கு மாறு செய்பவன், ஆண்களைப் போன்று நடந்து கொள்ளும் பெண்கள், குடும்பத்தினரின் கெட்ட நடத்தைகளை கண்டும் காணாமல் இருப்பவன். (நஸாயி, அஹ்மது)

## 27. வயோதிகத்தில் விபசாரம் செய்வது.

## 28. அரசன் பொய் சொல்வது.

## 29. ஏழை பெருமையடிப்பது.

மூன்று நபர்கள், அவர்களுடன் அல்லாஹ் மறுமையில் பேசவும் மாட்டான்; அவர்களைத் தூய்மைப்படுத்தவும் மாட்டான்; அவர்களைப் பார்க்கவும் மாட்டான். மேலும், அவர்களுக்கு வலி தரும் வேதனையும் உண்டு. அவர்கள், விபசாரம் செய்யும் வயோதிகன். பொய் பேசும் அரசன், பெருமையடிக்கும் ஏழை. (முஸ்லிம்)

## 30. அகந்தையுடன் நடந்து செல்வது. (அல்குர்ஆன் 31:18)

## 31. ஒப்பந்தம் செய்தவர்களைக் கொல்வது.

ஒப்பந்தக்காரர்களை கொலை செய்து விடுபவன் சொர்க்கத்தின் வாடையைக்கூட நுகரமாட்டான். சொர்க்கத்தின் வாடையை நாற்பது ஆண்டுகள் தொலைவிலிருந்தும் உணர்ந்து கொள்ள முடியும். (புகாரி, முஸ்லிம்)

## 32. மக்களுக்கு மோசடி செய்யும் அரசன்.

அல்லாஹ் அரசாட்சி கொடுத்த ஓர் அடியான் தனது மக்களுக்கு மோசடி செய்த நிலையில் மரணித்தால் அவன்மீது நிச்சயமாக அல்லாஹ் சுவனத்தை ஹராமாக்கி விடுவான். (புகாரி, முஸ்லிம்)

**33. மக்களை அடித்துத் துன்புறுத்துவது.**

**34. பர்தாவை பேணாமல் இருப்பது.**

இரண்டு கூட்டத்தினர் நரகவாசிகள்: அவர்கள் சொர்க்கம் புகமாட்டார்கள். அவர்களில் முதல் கூட்டத்தினர் மாட்டு வால்களைப்போல் சாட்டை களை வைத்துக்கொண்டு மக்களை அடிப்பவர்கள். இரண்டாவது கூட்டத்தினர் ஆடை அணிந்தும் நிர்வாணமாக காட்சி அளிக்கும் பெண்கள். அவர்கள் ஆண்களை தன்பக்கம் இழுப்பார்கள்; தாங்களும் ஆண்கள் பக்கம் சாய்வார்கள். (முஸ்லிம்)

# அழிவை ஏற்படுத்தும் பாவங்கள்

**35. சிறுநீர் கழித்து சரியாக சுத்தம் செய்யாமல் இருப்பது, கோள் சொல்வது.**

இரு கப்ருகளைப் பார்த்து நபி (ஸல்) அவர்கள்

கூறினார்கள்: “இவ்விருவரும் வேதனை செய்யப்படு கிறார்கள்; அவர்கள் செய்த செயல்கள் பெரிதல்ல.” பிறகு கூறினார்கள்: “இல்லை! அவை பெரும் பாவங்கள்தான். ஒருவர் சிறுநீர் கழித்த பிறகு சுத்தம் செய்யமாட்டார். மற்றொருவர் கோள் சொல்லித் திரிவார்.” (புகாரி, முஸ்லிம்)

## 36. பொய் சத்தியம் செய்வது.

பெரும்பாவங்களாவன: அல்லாஹ்விற்கு இணை வைப்பது, பொய் சத்தியம் செய்வது. (புகாரி)

## 37. பொய் பேசுவது.

நயவஞ்சகனின் அடையாளம் மூன்று. அதில் முதலாவது பொய் பேசுவது – நரகவாசிகள் ஐந்து வகைப்படுவர்.... அதில் ஒருவர் பொய்யர். (முஸ்லிம்)

## 38. விபசாரம்.

(நம்பிக்கையாளர்களே!) நீங்கள் விபசாரத்திற்கு நெருங்கவும் வேண்டாம். ஏனென்றால், நிச்சயமாக அது மானக்கேடானதாகவும், தீய வழியாகவும் இருக்கிறது. (அல்குர்ஆன் 17:32)

## 39. ஓரினச் சேர்க்கை.

லூத்தையும் (நம்முடைய தூதராக அவருடைய மக்களுக்கு நாம் அனுப்பி வைத்தோம்.) அவர் தம் மக்களை நோக்கி "உங்களுக்கு முன்னர் உலகத்தில் எவருமே செய்திராத மானக்கேடானதொரு காரியத்தையா நீங்கள் செய்கின்றீர்கள்? (அல்குர்ஆன் 7:80)

## 40. வட்டி வாங்குவது, கொடுப்பது.

அல்லாஹ் வியாபாரத்தை ஆகுமாக்கி, வட்டியை தடுத்துவிட்டான். (அல்குர்ஆன் 2:275)

நபி (ஸல்) அவர்கள் வட்டி வாங்குபவனையும், வட்டி கொடுப்பவனையும், அதை எழுதுபவனையும், அதன் சாட்சியையும் சபித்தார்கள். மேலும் இவர்கள் அனைவரும் பாவத்தில் சமமானவர்களே! என்றும் கூறினார்கள். (முஸ்லிம்)

## 41. ஸகாத் கொடுக்காமல் இருப்பது.

ஸகாத் கொடுக்காதவர்களை நெருப்புப் பட்டை களைக் கொண்டு நரகத்தில் அவர்களது நெற்றி, முகம், முதுகு மற்றும் கன்னத்திலும் சூடு

போடப்படும். மறுமையின் ஒருநாள் ஐம்பதாயிரம் வருடங்களுக்குச் சமமானது. (அஹ்மது, முஸ்லிம்)

## 42. கனவில் காணாததைக் கண்டதாக கூறுவது

கனவில் காணாததைக் கண்டதாக கூறுபவனிடம் மறுமையில் இரண்டு கோதுமைகளை கொடுத்து அவற்றில் ஒன்றை மற்றொன்றுடன் இணைத்துக் கட்டு என சொல்லப்படும். ஆனால் அது அவனுக்கு அறவே முடியாது. (முஸ்லிம்)

## 43. மற்றவர்களது உரையாடலை அவர்களது விருப்பமின்றி கேட்பது.

மற்றவர்களது உரையாடலை அவர்களது விருப்ப மின்றி கேட்பவர் காதில் மறுமையில் செம்பை பழுக்கக் காய்ச்சி ஊற்றப்படும். (முஸ்லிம்)

## 44. உருவம் வரைவது.

அல்லாஹ்விடத்தில் மறுமையில் மிகக் கடினமான வேதனைக்குரியவர், உருவம் வரைபவர்கள். (முஸ்லிம்)

## 45. தலாக் விடப்பட்ட பெண்ணை முதல்

**கணவனுக்கு ஆகுமாக்கி வைப்பதற்காக மணமுடிப்பது. மணமுடித்துக் கொடுப்பது.**

## 46. முத்தலாக் விட்ட பிறகு அவளையே மணம் முடிக்க விரும்பி பிறருக்கு திருமணம் செய்து வைப்பது.

முஹல்லில் – முஹல்லல் லஹு ஆகிய இருவரையும் அல்லாஹ் சபித்துள்ளான். (அபூதாவூது, திர்மிதி)

## 47. குடும்பத்தார்களை பராமரிக்காமல் விட்டு விடுவது.

குடும்பத்தார்களை பராமரிக்காமல் விட்டுவிடுவது ஒருவனின் பாவத்திற்கு போதுமானது. (முஸ்லிம், அஹ்மது)

## 48. லஞ்சம் வாங்குவது. கொடுப்பது.

லஞ்சம் கொடுப்பவனையும் வாங்குபவனையும் அல்லாஹ் சபிக்கின்றான். (அபூதாவூது, அஹ்மது)

## 49. வமிசத்தைக் இழிவாகப் பேசுவது.

## 50. ஒப்பாரி வைப்பது.

இரண்டு செயல்கள் இறை நிராகரிப்புக்கு சமமான

பாவங்களாகும். அவை: வமிசத்தைக் இழிவாகப் பேசுவது, இறந்தவருக்காக ஒப்பாரி வைத்து அழுவது. (முஸ்லிம்)

## 51. இஸ்லாமிய சமுதாயத்தை விட்டும் வெளியேறுவது.

யார் சமுதாயத்தை விட்டு வெளியேறுகிறாரோ அவர் (தன்மீதுள்ள) இஸ்லாமிய சின்னத்தை கழட்டியவராவார். (திர்மிதி, அஹ்மது, இப்னு குஜைமா)

## 52. சூதாடுவது, பந்தயம் கட்டுவது.

இறை நம்பிக்கையாளர்களே! நிச்சயமாக மதுவும், சூதாட்டமும்.... ஷைத்தானுடைய அருவருக்கத்தக்க வேலைகளில் உள்ளவையாகும். ஆகவே, அவைகளிலிருந்து நீங்கள் விலகிக் கொள்ளுங்கள். அதனால் நீங்கள் வெற்றியடைவீர்கள். (அல்குர்ஆன் 5:90)

## 53. முஸ்லிமை ஏசுவது, அவரிடம் சண்டையிடுவது.

முஸ்லிமை ஏசுவது பெரும்பாவம், அவரிடம்

சண்டைக்குச் செல்வது 'குஃபர் இறை நிராகரிப்பாகும்'. (புகாரி)

## 54. நபி (ஸல்) அவர்கள் மீது பொய் சொல்வது.

யார் வேண்டுமென்றே என்மீது பொய் சொல்கிறாரோ அவர் தனது இருப்பிடத்தை நரகத்தில் ஏற்படுத்திக் கொள்ளட்டும். (புகாரி)

## 55. திருடுவது.

திருடுபவனை அல்லாஹ் சபிக்கின்றான். (முஸ்லிம்)

## 56. உயிருள்ள பிராணிகளை நிறுத்தி வைத்து குறிபார்த்து அம்பெறியப் பழகுவது.

உயிருள்ள பிராணியை எவன் குறியாக (இலக்காக) ஆக்கிக் கொள்கிறானோ; அவனை அல்லாஹ் சபிக்கின்றான். (முஸ்லிம்)

## 57. குற்றவாளிக்கு அடைக்கலம் கொடுப்பது.

குற்றவாளிக்கு அடைக்கலம் கொடுப்பவர்களை அல்லாஹ் சபிக்கின்றான். (முஸ்லிம்)

**58. அல்லாஹ் அல்லாதவைகளுக்கு பலியிடுவது.**

யார் அல்லாஹ் அல்லாதவற்றுக்கு பலியிடுகிறாரோ, அவரை அல்லாஹ் சபிக்கின்றான். (முஸ்லிம்)

**59. தந்தையை மாற்றிக் கூறுவது.**

**60. எஜமானரை மாற்றிக் கூறுவது.**

யார் தந்தையை மாற்றிக் கூறுகிறாரோ அல்லது எஜமானரை மாற்றிக் கூறுகிறாரோ அவர்மீது அல்லாஹ், மலக்குகள், மனிதர்கள் அனைவரின் சாபமும் உண்டாகும். (புகாரி, முஸ்லிம்)

**61. முகத்தில் அடையாளமிடுவது. (சூடு போடுவது.)**

யார் முகத்தில் சூடு போடுகிறாரோ அவரை அல்லாஹ் சபிக்கின்றான். முகத்தில் சூடு போடப்பட்ட கழுதையை பார்த்தபோது நபி (ஸல்) அவர்கள் இவ்விதம் கூறினார்கள். (முஸ்லிம்)

**62. நிலங்களின் அடையாளங்களை மாற்றுவது.**

யார் பூமியின் அடையாளங்களை மாற்றுகிறாரோ, அவரை அல்லாஹ் சபிக்கின்றான். (முஸ்லிம்)

## 63. புறம் பேசுவது.

உங்களில் ஒருவர் மற்றவரை(ப் பற்றி)யும் புறம் பேசவேண்டாம். உங்களில் எவனும் தன் இறந்த சகோதரனின் மாமிசத்தை உண்ண விரும்புவானா? அதனை நீங்கள் வெறுப்பீர்களே! (புறம் பேசுவதும் அவ்வாறே. இவ்விஷயங்களில்) அல்லாஹ்வுக்குப் பயந்து கொள்ளுங்கள். (அல்குர்ஆன் 49:12)

## 64. மது தயாரிப்பது, விற்பது.

மதுவை பிழிய சொல்பவன், பிழிந்து கொடுப்பவன், குடிப்பவன், சுமந்து செல்பவன், யாருக்கு சுமந்து செல்லப்படுகிறதோ அவன், அதை ஊற்றிக் கொடுப்பவன், அதை விற்பவன், அதன் கிரயத்தை சாப்பிடுபவன், அதை வாங்குபவன், யாருக்காக வாங்குகிறானோ அவன் ஆகிய 10 நபர்களை நபி (ஸல்) அவர்கள் மது விஷயத்தில் சபித்தார்கள். (திர்மிதி, இப்னு மாஜா)

## 65. பச்சை குத்துவது.

பச்சை குத்தும் ஆணையும் பெண்ணையும்

அல்லாஹ்வின் படைப்பை மாற்றுகிறவர் களையும் அல்லாஹ் சபிக்கின்றான். (புகாரி)

## 66. நெற்றி (புருவ) முடியை அகற்றுவது.

## 67. பல்லை ரம்பத்தைக் கொண்டு தீட்டி அழகுபடுத்துவது.

நெற்றி முடியை அழகுக்காக அகற்றும் பெண்க ளையும்: அழகுக்காக பற்களை தேய்த்து குறைத்துக் கொள்ளும் பெண்களையும்; அல்லாஹ்வின் படைப்பை மாற்றிக் கொள்ளும் பெண்களையும் அல்லாஹ் சபிக்கின்றான். (புகாரி)

## 68. சவரிமுடி கட்டிக் கொள்வது.

சவரிமுடி கட்டிவிடும் ஆணையும் பெண்ணையும், பச்சை குத்தும் ஆணையும் பெண்ணையும் அல்லாஹ் சபிக்கின்றான். (புகாரி)

## 69. ஆண்கள் பெண்களைப் போன்று நடந்து கொள்வது.

பெண்ணைப் போன்ற நடத்தையுடைய ஆண் களையும் ஆணைப்போன்ற நடத்தையுடைய

பெண்களையும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) சபித்தார்கள். (புகாரி)

## 70. கப்ருகளை தொழும் இடமாக்குவது.

யூதர்கள், கிறிஸ்தவர்கள் மீது சாபம் உண்டாகட்டும்! அவர்கள் தங்கள் இறைத் தூதர்களின் அடக்கஸ்தலங்களை தொழும் இடங்களாக ஆக்கிக் கொண்டனர். (புகாரி)

## 71. வழிப்போக்கருக்கு தண்ணீர் தர மறுப்பது.

மூன்று நபர்களுடன் அல்லாஹ் மறுமையில் பேசமாட்டான். அவர்களை பார்க்கவும் மாட்டான். அவர்களை தூய்மைப்படுத்தவும் மாட்டான். அவர்களுக்கு நோவினை தரும் வேதனையும் உண்டு. அவர்களில் ஒருவன் பாலைவனத்தில் தன்னிடம் தேவைக்கு போக மீதம் தண்ணீர் இருந்தும் அதை வழிப் போக்கருக்கு தர மறுப்பவன். (முஸ்லிம்)

## 72. பொய் சத்தியம் செய்து பொருளை விற்பது.

## 73. கரண்டைக்குக் கீழ் ஆடை அணிவது.

மூன்று நபர்களை அல்லாஹ் மறுமையில் பார்க்க மாட்டான்; அவர்களை தூய்மைப்படுத்தவும் மாட்டான்; அவர்களுக்கு நோவினைத் தரும் வேதனையும் உண்டு. அவர்கள்: உபகாரத்தைச் சொல்லிக் காண்பிப்பவன். கரண்டைக்குக் கீழ் ஆடை அணிபவன், பொய் சத்தியம் செய்து பொருளை விற்பவன். (முஸ்லிம்)

## 74. (பைஅத்) வாக்குப் பிரமாணத்திற்கு மோசடி செய்வது.

மூன்று நபர்களிடம் அல்லாஹ் மறுமையில் பேசமாட்டான்; அவர்களை பார்க்கவும் மாட்டான்; அவர்களை தூய்மைப்படுத்தவும் மாட்டான்; அவர்களுக்கு நோவினை தரும் வேதனையும் உண்டு. அதில் ஒருவர் ஆட்சியாளரிடம் வாக்குப் பிரமாணம் செய்து கொடுக்கிறார்; ஆனால் அவரது நோக்கமோ அவரிடமிருந்து உலகாதாயத்தை பெறுவது மட்டுமே. ஆட்சியாளர் மூலம் பலன் கிடைத்தால் வாக்கை நிறைவேற்றுகிறார். ஏதும் பலன் கிடைக்கவில்லையெனில் வாக்கை நிறைவேற்றுவ தில்லை. (முஸ்லிம்)

## 75. ரமழான் நோன்பை விடுவது.

அல்லாஹ் அனுமதித்த சலுகையின்றி ஒருவர் ரமழானில் ஒரு நாள் நோன்பை விட்டால், காலமெல்லாம் அவர் அந்த நோன்பை நோற்றாலும் அவரிடமிருந்து அது ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. (அஹ்மது, திர்மிதி, அபூதாவூது)

## 76. முஸ்லிம்களின் மீது ஆயுதத்தை உபயோகிப்பது.

யார் நம்மைத் தாக்க ஆயுதத்தைத் தூக்குகிறாரோ அவர் நம்மைச் சார்ந்தவர் அல்ல. (புகாரி, முஸ்லிம்)

## 77. இஸ்லாமின் அடிப்படைக் கடமைகளை விடுவது.

இஸ்லாம் ஐந்து கடமைகள்மீது அமைக்கப் பட்டுள்ளது. அவை: லாயிலாஹ இல்லல்லாஹ் என்று சாட்சி கூறுவது. தொழுகையை நிலைநிறுத்துவது. ஸகாத் கொடுப்பது. கஅபாவை ஹஜ் செய்வது, ரமழானில் நோன்பு நோற்பது. (புகாரி, முஸ்லிம்)

## 78. பொதுச் சொத்தில் மோசடி செய்வது.

ஒருவர் கனீமத்துப் பொருளில் ஒரு போர்வையை திருடியதற்காக அவரை நபி (ஸல்) அவர்கள் ‘நரகவாசி’ என்று கூறினார்கள். (முஸ்லிம்)

## 79. மனையிவின் பின்புறத்தில் உறவு கொள்வது.

மனைவியின் பின்புறத்தில் உறவு கொள்பவன் சபிக்கப்பட்டவன். (அபூதாவூது)

## 80. அநியாயம் செய்வது.

அநியாயம் செய்வதை பயந்து கொள்ளுங்கள்; நிச்சயமாக அநியாயம் செய்வது மறுமை நாளில் பல சிரமங்களை ஏற்படுத்திவிடும். (புகாரி, முஸ்லிம்)

## 81. இரும்பை (ஆயுதத்தை)க் கொண்டு சுட்டிக் காட்டுவது.

யார் தனது சகோதரனை ஓர் இரும்பைக் கொண்டு சுட்டிக் காட்டுகிறாரோ, அவர் அதை கீழே வைக்கும்வரை மலக்குகள் அவரை சபிக்கின்றனர். (முஸ்லிம்)

## 82. புனித பூமியான மக்காவின் கண்ணியத்தை

**பாழ்படுத்துவது. அதன் சங்கைக்கு பங்கம் விளைவிப்பது.**

அல்லாஹ்விடம் மக்களில் மிக வெறுப்பு மிக்கவர்கள் மூன்று நபர்கள். அவர்களில் ஒருவர் புனித பூமியின் கண்ணியத்தை பாழ்படுத்துபவர். (புகாரி)

## 83. ஏமாற்றுவது.

யார் நம்மை ஏமாற்றுகிறாரோ அவர் நம்மைச் சார்ந்தவர் அல்ல. (முஸ்லிம்)

## 84. முகஸ்துதி.

யார் பிறர் தன்னை புகழவேண்டும் என்பதற்காக அல்லது பிறர் தன்னைப் பார்க்க வேண்டுமென்பதற் காக ஒரு காரியத்தைச் செய்கிறாரோ அவரை அல்லாஹ் தண்டிப்பான். (புகாரி, முஸ்லிம்)

## 85. காணாமல் போன பொருளை தன்னால் அறியமுடியும் என்று கூறுபவனிடம் செல்வது.

யார் இவனிடம் சென்று தன் பொருளைப் பற்றி விசாரிக்கிறாரோ அவரது நாற்பது நாட்களின் தொழுகை ஏற்கப்படமாட்டாது. (முஸ்லிம்)

## 86. வெள்ளி, தங்கப் பாத்திரங்களை பயன் படுத்துவது.

வெள்ளி, தங்கப் பாத்திரங்களில் சாப்பிடுபவன் அல்லது குடிப்பவன் தனது வயிற்றில் நரக நெருப்பையே விழுங்குகிறான். (முஸ்லிம்)

## 87. ஆண்கள் பட்டு ஆடைகளை, தங்கம், வெள்ளி நகைகளை அணிவது.

தங்கம், வெள்ளி, பட்டு ஆகியவை இவ்வுலகில் இறை மறுப்பாளர்களுக்குரியன; மறுமையில், இறை நம்பிக்கையாளர்களுக்கு மட்டும் சொந்தமானது. (புகாரி)

ஒரு வெள்ளி மோதிரம் மட்டும் அணிந்து கொள்ள ஆண்களுக்கு அனுமதியுள்ளது.

## 88. நபித்தோழர்களை ஏசுவது.

எனது தோழர்களை ஏசாதீர்கள். அன்சாரிகளை நேசிப்பவர் முஃமின்; அவர்களை வெறுப்பவர் நயவஞ்சகத் தன்மையுடையவர். அவர்கள்மீது அன்பு கொள்பவர் மீது அல்லாஹ்வும் அன்பு கொள்கிறான்.

அவர்களை வெறுப்பவர்களை அல்லாஹ்வும் வெறுக்கின்றான். (புகாரி, முஸ்லிம்)

## 89. தொழுபவருக்கு முன் குறுக்கே செல்வது.

தொழுபவருக்கு முன் குறுக்கே செல்பவர் அதன் தண்டனையை தெரிந்துகொண்டால் அவ்வாறு செல்வதைவிட நாற்பது ஆண்டுகள் நிற்பது மேல் என எண்ணிக்கொள்வார். (புகாரி, முஸ்லிம்)

## 90. எஜமானனை விட்டும் அடிமை ஓடுவது.

தனது எஜமானர்களை விட்டும் ஓடிய அடிமை இறைவனை மறுத்துவிட்டார். அவர் அவர்களிடம் திரும்பி வரும்வரை அவ்வாறே இருப்பார். (முஸ்லிம்)

## 91. அனாசாரம் அல்லது வழி கேட்டிற்கு அழைப்பது.

அல்லாஹ்விடம் மக்களில் மிக வெறுப்பிற்குரியவர் மூன்று நபர்கள். அவர்களில் ஒருவர் தான் முஸ்லிமாக இருந்தும் அறியாமைக் காலத்து வழிமுறையைப் பின்பற்றுபவர். (புகாரி)

தவறான வழியில் செல்ல பிறரைத் தூண்டுபவருக்கு அவ்வழியில் செல்பவரின் பாவம் முழுமையாக வந்தடையும். அதனால் பின்பற்றுபவர்களின் பாவத்தி லிருந்து எதுவும் குறையவும் செய்யாது. (ஸஹுஹ் அல்ஜாமிஃ)

## 92. கணவன், மனைவி உறவுகளின் இரகசியங்களை வெளிப்படுத்துவது.

மறுமையில் அல்லாஹ்விடம் தகுதியால் மிகக் கெட்டவர்களில் ஒருவன், தனது மனைவியிடம் சேர்ந்துவிட்டு அதை பிறரிடம் பேசுகிறவன். (முஸ்லிம்)

## 93. மதீனாவின் கண்ணியத்தை பாழ்படுத்துவது.

## 94. மதீனாவின் கண்ணியத்தை பாழ்படுத்துபவர் களுக்கு அடைக்கலம் தருவது.

மதீனா புனித நகரமாகும். அதன் கண்ணியத்தை யார் பாழ்படுத்துகிறாரோ அல்லது அதனை பாழ் படுத்துகிறவர்களுக்கு அடைக்கலம் தருவாரோ அவர்மீது அல்லாஹ், மலக்குகள், மனிதர்கள் அனைவரது சாபமும் உண்டாகும். (புகாரி)

## 95. ஒரு முஸ்லிம் பிறருக்கு கொடுத்த பாதுகாப்பில் பங்கம் விளைவிப்பது.

முஸ்லிம்கள் அனைவரும் கொடுக்கின்ற பாதுகாப்பு சமமானதே. யார் பிற முஸ்லிம் கொடுக்கின்ற பாதுகாப்பில் பங்கம் விளை விக்கிறாரோ, அவர் மீது அல்லாஹ், மலக்குகள், மக்கள் அனைவரின் சாபமும் உண்டாகும். அவனிடமிருந்து கடமையான அல்லது உபரியான எந்த வணக்கமும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. (புகாரி, முஸ்லிம்)

## 96. அல்லாஹ் இன்னாரை மன்னிக்க மாட்டான் என்று சத்தியம் செய்வது.

அல்லாஹ் கூறுகிறான்: யாரொருவர் இன்னாரை நான் மன்னிக்க மாட்டேன் என்று என் மீது சத்தியம் செய்து கூறுகிறாரோ, அவருக்கு நான் கூறுகிறேன். இன்னாரின் பாவங்களை நான் மன்னித்து விட்டேன். உனது அமலை நான் நாசமாக்கிவிட்டேன். (முஸ்லிம்)

## 97. ஜுமுஆ தொழுகையை விடுவது.

(சிலர் ஜுமுஆ தொழுகையை விட்டு விடுகின்றனர்;

அதிலிருந்து அவர்கள் விலகிக் கொள்ள வேண்டும்; அல்லது உள்ளங்கைகளில் அல்லாஹ் முத்திரையிட்டு விடுவான்; பின்பு மறதியாளர்களில் ஒருவனாக அவன் ஆகிவிடுவான். (முஸ்லிம்)

## 98. கணவனின் வெறுப்பை சம்பாதிப்பது.

கணவனின் அழைப்பை ஏற்காமல் அன்றிரவு அவனது கோபத்திற்கு ஆளான மனைவியை காலை விடியும் வரை மலக்குகள் (வானவர்கள்) சபித்துக் கொண்டிருக்கின்றனர். (புகாரி, முஸ்லிம்)

## 99. மனைவி. கணவனுடன் நன்றி கெட்டத் தனமாக நடப்பது.

## 100. அதிகம் சபிப்பது.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: பெண்களே! நீங்கள் தர்மம் கொடுத்துக் கொள்ளுங்கள். ஏனெனில், நீங்கள் நரகத்தில் அதிகம் இருப்பதை நான் பார்த்தேன். அதற்குக் காரணம் என்ன என்று அப்பெண்கள் வினவினர். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் அதிகம் சபிக்கின்றீர்கள், கணவனுடன் நன்றி கெட்டத்தனமாக நடந்து கொள்கிறீர்கள். (புகாரி)

# திருமணம் மற்றும் இதர நிகழ்ச்சிகளில் நடக்கும் தவறுகளும் அனாசாரங்களும்

**(வெளியீடு: 'மதாருல் வதன்' கல்வி ஆராய்ச்சி நிலையம்)**

1. மார்க்கம் அனுமதித்த காரணமின்றி திருமணம் செய்வதை தள்ளிப்போடுவது அல்லது திருமணம் செய்வதிலிருந்து விலகி இருப்பது.

2. பெண்கள் தாங்கள் மேற்படிப்புப் படிக்க வேண்டும் என்று காரணம் கூறி திருமணத்தை மறுப்பது.

3. மார்க்கம் அனுமதித்த காரணமின்றி பெற்றோர் தன் பெண் பிள்ளைகளின் திருமணத்தை தள்ளிப்போடுவது.

4. பாவம் மற்றும் மார்க்கத்திற்கு முரணான செயல்களில் ஈடுபாடுள்ளவர்களுக்கு தங்கள்

பெண் பிள்ளைகளை மணம் முடித்து கொடுப்பது.

5. பெண்ணை அவளுக்கு விருப்பமில்லாத வருக்கு நிர்ப்பந்தமாக மணம் முடித்துக் கொடுப்பது.

6. ஒரு பெண், தனது மூத்த சகோதரி மணம் முடிக்காதவரைதான் மணம் முடிக்க மாட்டேன் என்று கூறுவது. மூத்த பெண்ணுக்கு திருமணமானால்தான் இளைய வளுக்கு திருமணம் செய்து கொடுப்பேன் என்று பெண்ணின் பொறுப்பாளர் கூறுவது. (இதனால் இருவரது திருமணமும் தாமதமாகலாம்.)

7. பெண் கேட்டு வருபவரின் மார்க்கப் பண் பாட்டை பார்க்காமல் உலக பொருளா தாரத்தை மட்டும் பார்ப்பது. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: யாருடைய குணமும் மார்க்கப் பேணுதலும் தான் விரும்பும்படி இருக்கிறதோ அத்தகையவர் பெண்

கேட்டு வந்தால் அவருக்கு மணம் முடித்து கொடுங்கள். அப்படி செய்யவில்லையெனில் பூமியில் குழப்பமும், பெரும் சீர்கேடும் ஏற்பட்டுவிடும். (திர்மிதி)

8. குடும்ப வழமையைக் காரணம் காட்டி உறவு முறையில் உள்ளவரை மணம் முடிக்க பெண்ணை நிர்பந்திப்பது.

9. குறி பார்ப்பவர்களிடம் சென்று ஆலோசனை செய்வது, நட்சத்திர ராசி, ஜாதக ஒற்றுமை பார்ப்பது, இவ்வாறு செய்வது மாபெரும் குற்றமாகும்.

10. பெண் பேச வரும் மாப்பிள்ளையை மார்க்கம் அனுமதித்த முறையில் பெண்ணை பார்க்க அனுமதிக்காமல் இருப்பது.

11. திருமணத்திற்கு முன் பெண்ணுடன் தொலை பேசியில் பேசி உரையாடுவது. (ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ள வேண்டும் என்று கூறி இவ்வாறு செய்கின்றனர். இது ஏற்றுக்கொள்ளத் தகுந்த காரணமல்ல.)

12. மார்க்க ஹிஜாப் இன்றி (மாற்றார்களைப் போல) பெண் பிள்ளைகளை அலங்கரித்து பெண் பேச வரும் சபைக்கு கொண்டு வருவது. (மானமுள்ள மக்கள் இத்தகைய செயலை செய்யமாட்டார்கள்.)

13. பெண்களை பார்க்கவேண்டும் என்பதற்காக பெண் பேசச் செல்வது; திருமணம் முடிக்க வேண்டும் என்ற எண்ணமில்லாமல் இவ்வாறு செய்வது பெரும் மோசடியும் ஏமாற்றும் தன்மையுமாகும்.

14. பெண் பேச வருபவரிடம் பெண்ணின் போட்டோவை தருவது. இதன்மூலம் பல சீர்கேடுகள் நிகழ்கின்றன.

15. பெண் பேசும்போது மாற்று மத கலாச்சாரத்தை பின்பற்றி மோதிரம் அணிவிப்பது.

16. பெண் பேசும் நிகழ்ச்சிகளில் பெண்கள் கூச்சலிடுவது, ஒருவிதமாக சப்தமிடுவது.

17. பெண் பேசிவிட்டு துரிதமாக திருமண

ஏற்பாடு செய்யாமல் நீண்ட இடைவெளி விடுவது.

18. பெண் பேச துவங்கும் முன் அல்லது பேசிவிட்டு அல்ஃபாத்திஹா ஓதுவது - இவ்வாறு செய்வதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை.

19. அதிகமான மஹ்ர் கேட்பது.

20. திருமண ஒப்பந்தம் நடக்கும் சமயம் யாராவது கை சொடக்குவிட்டால் அதை துற்குறியாக கருதுவது - அதனால் திருமணம் நின்றுவிடும் அல்லது முறிந்துவிடும் என்று நம்புவது.

21. பெண்ணின் பொறுப்பாளி, மாப்பிள்ளையின் கையைப் பிடித்துக் கொண்டபின்தான் திருமண ஒப்பந்தம் படிப்பது சரி என்று கூறுவது. இவ்வாறு செய்வதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை.

22. திருமண ஒப்பந்தத்தில் பயன்படுத்த

வேண்டிய அவசியமான வாக்கியங்களுடன் அதிகப்படியாக கூறுவது. எ.கா: என்னை வக்கீலாக நியமித்த பெண்ணை அல்லாஹ் வின் வேதப்படி, அவனது தூதரின் வழி முறைப்படி நிர்ணயிக்கப்பட்ட மஹ்ருக்கு இன்ன இமாமின் மத்ஹபை பின்பற்றி உனக்கு மணம் முடித்துக் கொடுக்கிறேன் என்று கூறுவது.

23. சில குறிப்பிட்ட நேரங்களில், நாள்களில், மாதங்களில் திருமணம் செய்வதை கெட்ட சகுனமாகக் கருதுவது.

24. துப்பாக்கி அல்லது வெடி வெடித்து திருமண நிகழ்ச்சி நடத்துவது.

25. பியூட்டி பார்லர் சென்று தன்னை அழகுபடுத்திக் கொள்கிறேன் என்ற பெயரில் மார்க்கம் தடுத்தவற்றை செய்வது. (எ.கா: மறைக்கவேண்டிய பகுதியை மறைக்காமல் இருப்பது, நெற்றி (புருவ) முடியை அகற்றுவது.

மாற்று மத பெண்களைப்போல் முடியை கிராப் வெட்டிக்கொள்வது.)

26. திருமண நிகழ்ச்சிகளில் ஆண்கள், பெண்கள் என வேறுபாடு இன்றி கலந்துறவாடுவது.

27. பெண் கவர்ச்சியான, அசிங்கமான ஆடைகளை அணிவது. (அவள் பெண்களுக்கு மத்தியில் இருப்பினும் சரியே)

28. கிறிஸ்துவ பெண்களைப்போல் நீண்ட திருமண ஆடைகளை அணிவது (இத்தகைய ஆடைகளை பின்பக்கத்திலிருந்து சுமந்து வருவதற்கு பல நபர்கள் தேவைப்படும்.)

29. மாப்பிள்ளையையும் பெண்ணையும் கூட்டத்திற்கு நடுவில் உட்கார வைப்பது, நிகழ்ச்சிக்கு வந்திருக்கும் அனைவரும் அவர்களைப் பார்க்க ஏற்பாடு செய்வது.

30. பெண்கள் மார்க்க ஹிஜாப் இன்றியும் நறுமணம் பூசிக்கொண்டும் வீட்டுக்கு வெளியே செல்வது.

31. ஆண் குழந்தைகள் பெற்று வளமுடன் வாழ்க! என வாழ்த்துவது. (இது காஃபிர்களின் வாழ்த்தாகும். நபி (ஸல்) அவர்கள் கற்றுக் கொடுத்த (துஆ) வாழ்த்துரையைத்தான் கூறவேண்டும்.)

32. நிகழ்ச்சிக்கு வந்திருக்கும் பெண்களை மணம் முடிப்பவர் பார்க்கும்படி செய்வது. அந்நியப் பெண்கள் மாப்பிள்ளைக்கு வாழ்த்து கூறுவது.

33. இசை இசைப்பது, பாடகர்கள் அல்லது பாடகிகளை அழைத்து பாட வைப்பது.

34. நிகழ்ச்சிக்கு வந்திருக்கும் பெண்கள், மைக்கில் ஆண்கள் கேட்கும்படி பாடுவது.

35. கை தட்டி பாட்டுப்பாடி கும்மாளம் போடும் பெண்களை நிகழ்ச்சிக்கு அழைப்பது.

36. பெண்கள் நடனமாடுவது.

37. வலிமா மற்றும் இதர விருந்துகளில் அளவு கடந்து செலவு செய்வது.

38. படுக்கை அறை ரகசியங்களை வெளியிடுவது.

39. தேனிலவு கொண்டாடச் செல்கிறோம் என்று கூறி அந்நியர்களின் நாட்டுக்குச் செல்வது. இவ்வாறு செய்வது மேற்கத்திய கலாச்சார மாகும். (இதனால் நடக்கக்கூடாத பல சம்பவங்கள் நடப்பதைப் பார்க்கிறோம்.)

# பாவமன்னிப்புக் கோருதல்

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِينَ اَللّٰهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَى مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ

(இறைவனே! உன் வேத வசனங்களை) நாங்கள் செவியுற்றோம். (உன் கட்டளைக்கு) நாங்கள் கீழ்ப் படிந்தோம். எங்கள் இறைவனே! நாங்கள் உனது மன்னிப்பைக் கோருகிறோம். உன்னிடம்தான் நாங்கள் சேர வேண்டியதிருக்கிறது.

(அல்குர்ஆன் 2:285)

எங்கள் இறைவனே! நாங்கள் (எங்கள் கடமைகளைச் செய்ய) மறந்து விட்டாலும் அல்லது அதில் தவறிழைத்துவிட்டாலும் அதைப் பற்றி நீ எங்களை (குற்றம்) பிடிக்காதே! எங்கள் இறைவனே! நீ எங்கள் மீது (கடினமான கட்டளைகளை விதித்து) பளுவான சுமையை சுமத்தி விடாதே, எங்களுக்கு முன்னிருந்தவர்கள் மீது (கடினமான கட்டளைகளை) நீ சுமத்தியவாறு (சுமத்தாதே!). எங்கள் இறைவனே!

நாங்கள் தாங்க முடியாத சிரமங்களை எங்கள் மீது சுமத்திவிடாதே! எங்கள் (குற்றங்களை) அழிப்பாயாக! எங்களை மன்னிப்பாயாக! எங்கள் மீது கருணை புரிவாயாக! நீதான் எங்கள் பாதுகாவலன்! ஆகவே (உன்னை) நிராகரிக்கும் கூட்டங்கள் மீது (வெற்றிபெற) நீ எங்களுக்கு உதவி புரிவாயாக!

(அல்குர்ஆன் 2:286)

எங்கள் இறைவனே! நிச்சயமாக நாங்கள் (உன்னை) நம்பிக்கை கொள்கிறோம். ஆதலால் நீ எங்கள் பாவங்களை மன்னித்து (அருள் புரிந்து, நரக) நெருப்பின் வேதனையிலிருந்தும் எங்களை காப்பாற்றுவாயாக! (அல்குர்ஆன் 3:16)

எங்கள் இறைவனே! எங்கள் பாவங்களை நீ மன்னிப்பாயாக! எங்கள் செயல்களில் நாங்கள் வரம்பு மீறிய (குற்றத்)தையும் மன்னிப்பாயாக! எங்கள் பாதங்களை (போரில் நழுவாது) நீ உறுதிபடுத்தியும் வைப்பாயாக! (உன்னை) நிராகரிக்கும் மக்களை வெற்றிபெற நீ எங்களுக்கு உதவி புரிவாயாக!

(அல்குர்ஆன் 3:147)

எங்கள் இறைவனே! நிச்சயமாக நீ எவர்களை (நரக) நெருப்பில் நுழைத்து விட்டாயோ அவர்களை நிச்சயமாக நீ இழிவுபடுத்தி விட்டாய். (அத்தகைய) அநியாயக்காரர்களுக்கு உதவி செய்பவர்கள் (ஒருவரும்) இல்லை. (அல்குர்ஆன் 3:192)

எங்கள் இறைவனே! எங்களுக்கு நாங்களே தீங்கிழைத்துக் கொண்டோம். நீ எங்களை மன்னித்து எங்களுக்கு அருள் புரியாவிட்டால் நிச்சயமாக நாங்கள் நஷ்டமடைந்தவர்களில் ஆகிவிடுவோம். (அல்குர்ஆன் 7:23)

என் இறைவனே! என்னையும், என் சந்ததிகளையும் (உன்னைத்) தொழுது வருபவர்களாக ஆக்கிவை. எங்கள் இறைவனே! என் பிரார்த்தனையை அங்கீகரித்துக் கொள்வாயாக! (அல்குர்ஆன் 14:40)

எங்கள் இறைவனே! எனக்கும், என் தாய் தந்தைக்கும், மற்ற நம்பிக்கையாளர்களுக்கும் கேள்வி கணக்கு நிறைவேறுகின்ற (மறுமை) நாளில் மன்னிப்பளிப்பாயாக! (அல்குர்ஆன் 14:41)

என் இறைவனே! (எனக்கும் இந்நிராகரிப்பாளர் களுக்கும் இடையில்) நீ நீதமாக தீர்ப்பளிப்பாயாக! எங்கள் இறைவன்தான் பேரருளாளன். உங்கள் (பொய்யான) கூற்றுகளுக்கு எதிராக அவனிடமே உதவி தேடுகிறோம். (அல்குர்ஆன் 21:112)

என் இறைவனே! நீ (என்னை) மன்னித்துக் கிருபை செய்வாயாக! கிருபை செய்பவர்களில் எல்லாம் நீதான் மிக்க மேலானவன். (அல்குர்ஆன் 23:118)

என் இறைவனே! நிச்சயமாக நான் எனக்கே தீங்கிழைத்துக் கொண்டேன். நீ என் குற்றத்தை மன்னிப்பாயாக! (அல்குர்ஆன் 28:16)

எங்கள் இறைவனே! எங்களையும் நீ மன்னித்தருள்! எங்களுக்கு முன் நம்பிக்கைகொண்ட எங்கள் சகோதரர்களையும் மன்னித்தருள்! நம்பிக்கை கொண்டவர்களைப் பற்றி எங்கள் உள்ளங்களில் குரோதங்களை உண்டு பண்ணாதே! எங்கள் இறைவனே! நிச்சயமாக நீ மிகக் கிருபையுடைய வனும், இரக்கமுடையவனுமாக இருக்கிறாய்!

(அல்குர்ஆன் 59:10)

எங்கள் இறைவனே! எங்களை நீ நிராகரிப்பவர்களின் துன்பத்திற்குள்ளாக்கி விடாதே! எங்களை நீ மன்னிப்பாயாக! நிச்சயமாக நீதான் (அனைவரையும்) மிகைத்தவனும் ஞானமுடையவனும் ஆவாய்.

(அல்குர்ஆன் 60:5)

உன்னைத் தவிர வணக்கத்திற்குரிய இறைவன் வேறொருவனும் இல்லை. நீ மிகப் பரிசுத்தமானவன். நிச்சயமாக நானோ அநியாயக்காரர்களில் ஒருவனாகி விட்டேன். (என்னை மன்னித்து அருள் புரிவாயாக!)

(அல்குர்ஆன் 21:87)

யா அல்லாஹ்! நீயே எனது இறைவன். உன்னைத் தவிர வேறு இறைவன் இல்லை. என்னை நீயே படைத்தாய். நான் உன்னுடைய அடிமை. என்னால் முடிந்த அளவு உனது உடன்படிக்கையின் மீதும் உன் வாக்குறுதியின் மீதும் (நிலைத்து) இருக்கிறேன். நான் செய்த செயல்களின் தீங்கிலிருந்து உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன். நீ என்மீது அருளிய அருட் கொடைகளை ஏற்றுக்கொள்கிறேன். மேலும் நான் என் பாவத்தையும் ஒப்புக்கொள்கிறேன்.

எனவே, என்னை மன்னிப்பாயாக! ஏனெனில், உன்னைத் தவிர வேறு எவரும் பாவங்களை மன்னிக்க முடியாது. (புகாரி)

யா அல்லாஹ்! கிழக்கிற்கும் மேற்கிற்கும் இடையில் நீ தூரத்தை ஏற்படுத்தியது போல் எனக்கும் என் தவறுக்குமிடையே நீ தூரத்தை ஏற்படுத்துவாயாக! யா அல்லாஹ்! வெண்மையான ஆடை அழுக்கிலிருந்து தூய்மைப்படுத்தப்படுவது போல் என் தவறுகளிலிருந்து என்னைத் தூய்மைப்படுத்துவாயாக! யா அல்லாஹ்! தண்ணீராலும் பனிக்கட்டியாலும் ஆலங்கட்டியாலும் என் தவறுகளை கழுவிடுவாயாக! (புகாரி, முஸ்லிம்)

யா அல்லாஹ்! எனது தவறுகளையும் அறியாமல் செய்த பாவங்களையும் மன்னிப்பாயாக! எனது செயல்பாடுகளில் நான் வரம்பு கடந்தவற்றையும் மன்னிப்பாயாக! என்னைவிட அதிகமாக நீ அறிந்திருக்கும் எனது பாவங்களையும் மன்னிப்பாயாக! யா அல்லாஹ்! எனது பாவங்களில் விரும்பிச் செய்தவற்றையும், விளையாட்டாக

கருதிச் செய்தவற்றையும், தெரிந்து செய்தவற்றை யும், தெரியாமல் செய்தவற்றையும், இன்னும் என்னிடம் நிகழ்ந்த எல்லாப் பாவங்களையும் மன்னிப்பாயாக! யா அல்லாஹ் நான் முற்காலத்தில் செய்த பாவங்களையும், பிற்காலத்தில் செய்த பாவங்களையும், மறைமுகமாகச் செய்த பாவங்களையும், பகிரங்கமாகச் செய்த பாவங் களையும் மன்னிப்பாயாக! நீயே முதலாமானவன்! நீயே முடிவானவன்! இன்னும் அனைத்தின் மீதும் நீயே பேராற்றல் உள்ளவன். (புகாரி, முஸ்லிம்)

யா அல்லாஹ்! கஷ்டமான சோதனைகளை விட்டும், தீமைகள் பீடிப்பதை விட்டும், மோசமான தீய முடிவை விட்டும், (நான் கஷ்டப்படுவது கண்டு) எதிரிகள் மகிழ்வதை விட்டும் உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன். (புகாரி, முஸ்லிம்)

யா அல்லாஹ்! எனது செயல்களுக்கு பாதுகாப்பாக அமைந்திருக்கும் எனது மார்க்கக் கடமைகளை எனக்கு சீர்படுத்தித் தருவாயாக! நான் வாழக்கூடிய என் உலக வாழ்க்கையையும் சீர்படுத்துவாயாக!

நான் மீண்டு செல்லக்கூடிய எனது மறுமை வாழ்க்கையையும் சீர்படுத்துவாயாக! எனது வாழ்நாளை நான் அதிகம் நன்மைகளை சேகரித்துக் கொள்வதற்குத் தகுந்ததாக ஆக்குவாயாக! எல்லா தீமைகளிலிருந்து எனக்கு விடுதலையாக எனது மரணத்தை ஆக்குவாயாக! (முஸ்லிம்)

யா அல்லாஹ்! நான் உன்னிடம் நேர்வழியையும், இறையச்சத்தையும், நல்லொழுக்கத்தையும் செல்வச் செழிப்பையும் வேண்டுகிறேன்.

(முஸ்லிம், திர்மிதி)

யா அல்லாஹ்! என்னை மன்னிப்பாயாக! எனக்கு அருள்புரிவாயாக! எனக்கு சுகமளிப்பாயாக! எனக்கு இரணமளிப்பாயாக! (முஸ்லிம்)

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே! இறையருளும் ஈடேற்றமும் நபி முஹம்மது (ஸல்) அவர்களுக்கும், அவர்களது குடும்பத்தார்கள், தோழர்கள், அவர்களைப் பின்பற்றும் அனைவர் மீதும் என்றென்றும் உண்டாகட்டுமாக!